# கண்ணிலே நீர் எதற்கு

1



தொட்டிலாய் அசைந்து விசைப் படகினுள் தாவி ஏறினாள், ஜோதிகா. அது சுகமாய் அசைந்தது.

இந்தப் பயணத்திற்கு ஒரு அர்த்தமிருந்தது - இனிய அர்த்தம். வாழ்க்கைக்கு நல்ல துணை அமையக் கூடிய வாய்ப்பு!

ராகவன் சிறந்த கட்டிடக்கலை நிபுணர். அமைதியான மனிதர். அவருடன் இணைந்து பணிபுரிந்த சமீப மாதங்களில் வேலையையும் மீறிய ஈடுபாட்டை அவரோடு வளர்த்துக் கொண்டாயிற்று. இப்போதும் அவர் அழைப் வர இவள் தேக்கடி வந்துவிட்டாள்.

தேக்கடி ஏரியைக் கடந்துள்ள சிறு தீவினுள் இருந்த திருவாங்கூர் மன்னரின் கோடை மாளிகையை உல்லாசப்

பயணவிடுதியாக மாற்றியமைக்கும் வேலை, அது. சில கோடி முதலீட்டுத் திட்டம்.

சில ஏக்கராப் பரப்புள்ள கச்சிதமான தீவுதான். அதன் புகைப்படங்கள் சிலவற்றை அனுப்பி வைத்ததோடு, வேலை பாதிக்கு மேல் முடிந்தாயிற்று ஜோதிகா. இனி உன் திறமை தான் தேவைப்படுகிறது. கட்டிடத்திற்கு ஏற்றாற்போல தோட்டங்களை திருத்தி அமைப்பதில் நீ தேர்ந்தவ ளாயிற்றே. தாழ்வான அமைப்பிலும் கம்பீரம் குறையாத கேரள பாணி அரண்மனைக்கு பொருத்தமாய் நீ தோட்டம் அமைத்து விட்டால், வேலைப் பூர்த்தி பெறும். எனக்கும் திருப்தி என்று எழுதியிருந்தார், ராகவன்.

ஒரு புகைப்படத்தில் அவரும் இடம் பெற்றிருக்க அதை அவள் சற்று அதிக நேரம் பார்த்திருந்து விட்டாள் போலும்!

ஒரு வயதான குட்டி மகனோடு தாய் வீட்டிற்குச் சீராட வந்திருந்த ஜோதிகாவின் அக்கா, அதைப் பறித்து ஆராய்ந் தாள்.

''ஓ! இவர்தான் ராகவனா? நீ கால் பாவாம மேகத்தில் மிதக்கிற பாவனையைப் பார்த்து நானும் இளைஞனாயிருப் பார்னு நினைச்சேன். அம்மா உன்னை வெளியூர் அனுப்ப விரும்பாததற்கும் அதுவும் ஒரு காரணம். ''வயசுப் பெண்ணை ஆண்களுடன் வேறு ஊர்களுக்கு... அது என்ன வேலைன் னாலும்... அனுப்பினால் வயிற்றிலே கனலோட கிடக்க வேண்டியிருக்கும்டி''ன்னு புலம்பறாங்க.''

''ஆனால் அப்பாவிற்கு என் திறமைகளைக் கண்டு பெருமைதான் - இல்லையாக்கா?''

''உம்ம்... அவர் எஸ்டேட்டிலே வளர்ந்து, வேலையும் பார்த்தவர். அவரது தாவரக் கிறுக்குத்தானே உனக்கும் பிடிச்சுப் போச்சு. வேலையில் இப்படி ரகம் ரகமான சவால் கள் அமையக் கொடுத்து வச்சிருக்கணும்னு உன்னைத் தட்டித் தர்றார்! எனக்கும் கூட ஓடி ஓடி நீ மறைவதில் பிரியமில்லடீ... அதுவும் கேரளாவிற்கு மொழி புரியாத பிரதேசம்.''



''அங்கு பேசுவது மலையாள ஜாடையிலிருக்கும் தமிழ் தான்.''

''புது ஆளுங்க... ஆனால், நீ பெங்களூரிலே அமைத்த தோட்டத்தைப் படமெடுத்து அனுப்பியிருந்த பாரு... அசந்துட்டேன். பிரமாதமா இருந்தது. ஆனால் நல்ல வேலை போலவே உனக்கும் நல்ல வீடும் அமையணும்டீ ஜோதி... அது முக்கியமில்லையா? ராகவன்ங்கிற பேரைச் சொல்லும் போதே உன் முகத்திலே திரிதூண்டியது போல ஒரு பிரகாசம். சரி... ஏதோ மனசு ஒப்பி கல்யாணம் பண்ணிக்கட்டும்னு நினைச்சா... இவர் இப்படி பாதி சொட்டையாய் நிற்கிறார். வயசு நாற்பதுக்கு மேலிருக்கும் போல...'' பெருமூச்சு விட்டாள் அக்கா.

''இருக்கும், வயசு, விருப்பம் குடும்பம் பற்றியெல்லாம் நாங்கள் பேசிக் கொண்டதில்லை. ஆனால் அங்கிருக்கும் போது குடும்பத்திற்கு கடிதமோ, 'பேசி'யோ போட்டிருக்க மாட்டார்? தனிக்கட்டைதான்... முழுமூச்சும் வேலையில் தான்.''

''ஆமா... உனக்கு எதிரே தான் 'பேசி'யில் குடும்பத்தோடு குலாவுவாராக்கும்?''

''குடும்பம் பற்றி ஒரு வார்த்தை இருந்ததில்லையே?''

''ஏய்... உனக்கவர் மேலே ஏதும் நோக்கமா?''

''ச்சே... சே... மதிப்புதான். அசாதாரண புத்தி. 'விடு விடு'ன்னு திட்டம் வரைந்து பொறியாளர், மேஸ்திரிகளுக்கு அதை விளக்கி, வேலை வாங்கிக்கிற அவருடைய நேர்த்தி பிடிக்கும் அவ்வளவுதான்.''

''நிறுத்திக்க. அத்தோட நிறுத்திக்க'' வேடிக்கையாய் போக்குவரத்து போலீசு போல சைகை காட்டினாள், மூத்தவள்.

யோசிக்கையில் மனம் 'அத்தோடு நிறுத்திக் கொண்ட தாய்' தெரியவில்லை. மதிப்பு... பிரேமையின் விளிம்பில் போய் நிற்கிறதோ என்ற சந்தேகம் ஜோதிகாவிற்கு உண்டு.

வயதிருந்தும் நல்ல உயரம் என்பதால் ராகவனுக்கு ஒற்றைநாடி உடல்தான். துளி கசங்கியிராத நேர்த்தியான உடைகள். வெயிலுக்கேற்ற ஜீன்ஸ் தொப்பியும், குளிர் கண்ணாடியுமாய் துறுதுறுவென அவர் நடக்கும் போது மிகக் கவர்ச்சியாய் இருப்பதாய் தோன்றும்.

''ஏய்... என்ன யோசனை?''

அக்கா விரல் சொடுக்கில் சுதாரித்தவள், மடிக்குள் தூங்கித் தொய்ந்த குழந்தையைக் குனிந்து முத்தமிட்டாள்.

''ஏய்... தூங்கற குழந்தையைக் கொஞ்சாதடீ.''

''முழிச்சிருக்கிற நேரம் இவனை அள்ள கைகொள்ளாதே. ரப்பர் பந்தாட்டம் திமிறித் துள்ளுவான். அதான் இப்ப கொஞ்சிக்கிறேன்.''

பஞ்சுக் கன்னங்களை வருடி பூஞ்சுருளாய் நெற்றியில் வளையமிட்டிருந்த முடியை ஒதுக்கினாள். உடலை முறுக்கிய குழந்தை மெள்ள விழி திறந்தான். சிறு சுழிப்புடன் ரோஜா உதடுகள் மலர்ந்தன.

''டேய் போக்கிரி... சித்திக்கு மட்டும் ஸ்பெஷல் சிரிப்பாடா இது?'' குனிந்து பால் மணத்த வயிற்றில் உதடு வைத்து ஊதினாள்.

''இக்... இக்...'' படபடவென கால் உதறி சிரித்தது குழந்தை.

சிரிப்பில் எச்சில் தெறித்தது.



படகு விளிம்பில் நின்றவள் முகத்தில் நீர் எம்பி சிதறியது. அக்கா குழந்தையின் நினைப்பு வர கொஞ்சல் சிரிப்புடன் முகம் திருப்பி துடைத்துக் கொண்டாள். சீறிய காற்று, அவள் முன்னுச்சி முடியை கொத்தாய் பிடுங்கிப் பறக்கவிட்டது.

குழந்தைக்கும் அவள் முடியைப் பற்றியிழுப்பதில் குஷி...

''டேய்... போக்கிரி'' தனக்குள் முணங்கியவள் தலை கோதியபோது வெகு அருகில் ஒரு கரகரத்த குரல் கேட்டது.

''காற்றோடு சரசமா?'' - என்று!

## 2



திடுக்கிட்டுத் திரும்பியவள் தனக்கு அத்தனை நெருக் கத்தில் ஒரு ஆணைப் பார்த்ததில் தடுமாறினாள். விலகி பின்னோக்கி அடிவைத்த கால்கள் பின்னின.

''கனவுலக சல்லாபத்தைக் கலைத்துவிட்டேன் போலும்'' குறும்பாய் சிரித்தவனது விழிகளும் மின்னலென நகைத்தன. அந்த ஒளி அவளை ஊடுருவிச் சென்றதைப் போல உணர்ந்து சிலிர்த்தாள்.

படகின் ஆட்டத்திற்கு சமாளித்து தன்னிடம் போய் அமர்ந்தாள். ''ச்சே... பூஜையில் கரடி போல யாரிவன்?''

ராகவனைப் பார்த்து இரண்டு மாதங்கள் இருக்கும். வேலையும் சவாலானதுதான். திறமையுள்ளவர்களுடன் இணைந்து பணிபுரியும் சுகமும் தனி.

இங்கே தங்கும் இருபது நாளில் ராகவனைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள சரியான வாய்ப்பு. பயன்படுத்திக் கொள்ள வேணும்.

இருவருக்கிடையே வயது வித்தியாசப்படலாம். ஆனால், மனப்பொருத்தம்? பார்க்கலாம்....

விசைப்படகு நீரைக் கிழித்து முன்னேறியதில் இரு புறமும் ஏரிநீர் சுழித்துச் சிதறியது. பால்நுரை போலப் பொங்கிச் சிரித்தது. வெள்ளைப்படகு தனக்காகத் தூது செல்லும் அன்னம்போலத் தோன்றியது இந்த நாயகிக்கு!

இவள் வர சம்மதம் தெரிவித்த உடனேயே ராகவன் பதில் எழுதிவிட்டார் - இவளுக்கென்று வசதியான அறை ஒன்று தயார் என்று மலையாளத் தம்பதிகள் தங்கி சமையல், இதர வேலைகளைச் செய்வதால் இவளுக்குப் பெண் துணையும் ஆனது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

ஜோதிகா வீட்டைவிட்டு ஆர்வமாய் கிளம்பியதற்கும் ஒரு காரணம் உண்டு. அங்கு மாப்பிள்ளை தேடும் படலம் வெகுமும்முரம்! பாதி பல்போன தரகர்கள் வீடேறி விழி தெறிக்க இவளை ''எடைபோட்டு'' விட்டு ''பெண் பார்வைக்கு இலட்சணந்தான். என்ன செய்வீங்க?'' என்று கேட்கையில் எரிந்தது.

''என்ன? என்னய்யா செய்யணும்? வேலையின் ஒரு ஒப்பந்தத்திற்கு இருபது, முப்பது ஆயிரம் சம்பாதிக்கிறேன். பார்வைக்கு அழகு, பழக பண்பு. இதற்குமேல் என்ன...?'' என்று தரகரின் கழுத்து அழுக்குத் துண்டைப்பிடித்து உலுக்க ஆவேசம் எழுகின்றது.

''நாலு வார்த்தை பேசிவிட்டு வருபவனை வாழ்க்கை முழுதிற்கும் துணையாக ஏற்றுக்கொள்வதா, அப்பா?'' சிணுங்குவாள்.

''பேச்சு எதற்கம்மா? பார்வையே போதுமே'' அவரும் சீண்டுவார். ஆனாலும், ''ஜோதிம்மா படிச்சவ. உலகத்தை பார்த்துப் புரிஞ்சவ. அவள் மனசு கனிஞ்சு கைகூடட்டும்''



என்று விட்டுப்பிடிக்க நினைத்த தந்தையை நன்றியோடு நினைத்துக் கொண்டாள்.

பிரயாண அலுப்புத் தீர, தேக்கடியிலேயே ஒரு அறை எடுத்துக் குளித்து உடைமாற்றிவிட்டாள். அவளது அலங் காரம் கச்சிதமாய் இருந்தது.

பொன்மஞ்சள் சேலை. அதே நிற 'கிரன்ச்சி' முடியை உயரத் தூக்கிக் கட்டியிருந்தது. கழுத்தில் பவளக் கற்கள் பாந்தமாய்... வடிவான அதரங்களும் கூட பவளங்களாய்...

கரை தெரிந்ததும் கலைந்த கூந்தலைச் சீர் செய்து கொள்ள முனைந்த போதுதான் அவன் விழியெடுக்காது தன்னையே உறுப்பதைக் கவனித்தாள். அடிக்கடி தனிப்பயணம் செய்தவள் என்பதால் ஆண்களின் வக்கிரப்பார்வை அவளுக்குப் புதிதல்ல. ஆனாலும் இதை அலட்சியம் செய்ய முடியவில்லை.

இவன் படபடப்பு புரியப் பேசினான். ''இந்தப் பகுதிக்கு பெண்கள் அதிகம் வருவதில்லை.''

''ஓ...''

''என்ன விசயமாய் வந்திருக்கிறீர்கள் என்று விசாரிக் கிறேன். நீங்கள் வெறும் 'ஓ' வோடு முடிந்தால் எப்படி?''

''பெண்கள் அதிகம் வராததின் காரணம் புரிந்து விட்டது.''

கேள்வியாய் அவன் ஒற்றைப் புருவம் மேலேறியது. ''எடுத்தவுடன் சரசம் சல்லாபம் என்று பேசும் இவ்விடம் பெண்கள் துணிந்து எப்படி வருவார்கள்? மானிகள் இருக்குமிடம் என்றால்...'' தோளைக் குலுக்கித் திரும்பி நின்றாள். இருந்தும் அவன் சிரிப்பதை உணர முடிந்தது.

அவன் சிரிப்பைக் காண ஆவலாயிருந்தும் திரும்பவில்லை. இதென்ன அசட்டுச் சிந்தனைகள் என்று தன்னையே கடிந்து கொண்டாள்.

படகின் இயந்திரம் நிறுத்தப்பட அது அமைதியாய் மெது யாய் கரையை அண்டியது. பழகிய பசு போல கொட்டடி தேடி நின்றது.

கரையில் ராகவன் நிற்பது தெரிந்தது. இளநீல உடையில் அந்த உருவம் உயரமாய் தெரிந்ததில் அவள் உள்ளம் குதூகலித்தது. அதேநேரம் தன் பின்னால் வெகு நெருங்கி நின்ற அப்புதியவனின் அண்மை ஒருவித அவதி தர அவசர மாய் இறங்க முயன்றாள்.

அப்போதுதான் நின்ற படகு ஓடி வந்ததில் இளைப்பது போல மூச்சிரைத்தது. பொங்கி அசைந்தது. கரையின் விளிம்பை விட்டு அகண்டு அகண்டு நெருங்கியது. இவள் மயங்க, பின்னே நின்றவன் முன்னேறி ஒரே அகல எட்டில் கரை சேர்ந்தான். பின் ஆங்கிலேய நடன பாணியில் சற்றே குனிந்து இவளுக்காய் கரம் நீட்டினான்.

காற்றில் கலைந்தாடிய அவனது அடர்ந்த முடியும், இளம் புன்னகையும் கங்கு பார்வையுமாய்... அவனது கவர்ச்சி ர்த்தது. ஆனாலும் பேச்சு முறையற்றதாய் இருந்ததே.

அவனைக் காணாதவள் போல தானே தாவினாள்.

சற்றே தடுமாறியவளின் முழங்கையை அவன் ஆதரவாய் பற்றினான்.

தீ பட்டாற்போன்ற ஸ்பரிசம்.

விதிர்த்து நிமிர்ந்தவளின் தலை அவன் மேவாயில் மோத... விரைந்து விலகியவளை மேலும் இறுக்கினான்.

''கவனம். இத்தனை அலங்காரமும் ஏரியில் விழுந்து நனைந் தால் எடுபடாமல் போய்விடும்'' எள்ளலாய் எச்சரித்தான்.

படபடப்பை அடக்க முயன்ற நேரம், ராகவன் நெருங்கி விட்டார். ''வா ஜோதிகா. பிரயாணமெல்லாம் வசதிதானே? இனி இங்கு வேலையும் ஜரூர்படும்.''



அவர் வரவேற்பில் பூரித்த அவள் முகம், ''இது என் மகள் பிரியா. பள்ளி இறுதித் தேர்வு எழுதிவிட்டு இங்கே வந்திருக் கிறாள். ஆனால், அவளுக்குப் பொழுதுதான் போகமாட் டேன் என்கிறது...'' என்று அவர் தொடர்ந்து பேச, அனல் பட்டாற்போல கூம்பியது.

ஆக ராகவன் திருமணமானவர்!

17 வயதில், தோளை மிஞ்சிய மகளுண்டு... அப்போது மனைவி? உற்சாக எதிர்பார்ப்பில் சிவந்திருந்த ஜோதிகா வின் கன்னங்கள் அதிர்ச்சியில் வெளிறின.

எதிர்பாராமல் குளிர்நீரில் முக்கி எடுத்தது போன்ற ஒரு வெலவெலப்பு...!

''பெரிய ஏமாற்றமோ... மனதைத் திடப்படுத்திக் கொள் பெண்ணே!''

அவள் காதோரம் அப்புதியவன் கிசுகிசுத்தான்!

3



''உங்களுக்குள் ஏற்கனவே அறிமுகமாயிற்றா?'' வினவிய ராகவன் இவள் முகம் பார்த்துவிட்டு.

''இவர் திரு. தீபன். நம் தீவை ஒட்டியே ஒரு 'கிளப்' நடத்துகிறார். முன்பு அரசு நிர்வகித்ததை இவர் லீஸ் எடுத்து, கடந்த ஓராண்டில் வெகுசிறப்பாக மாற்றியிருக்கிறார். சுற்றிலுமிருக்கும் தேயிலை எஸ்டேட் முதலாளிகள், நிர் வாகிகள் அனைவரும் சனி, ஞாயிறில் அங்குதான் வரு வார்கள். மிகத் தரமான உணவு விடுதி, கூடவே இனிய இசை... கூட்டத்திற்கும் லாபத்திற்கும் கேட்க வேண்டுமா?'' புன்னகையுடன் அறிமுகப்படுத்தினார்.

தீபன் அருகில் நெருங்கி இழைந்த பிரியா, முழங்கால் ரை ஒட்டிய முக்கால் பாண்ட் அணிந்திருந்தாள். பத்து யதில் போட்டுப் பிறகு கழற்ற மறந்ததைப் போன்ற ஒரு நுசட்டையும்! இளமைக்கே உரிய வனப்பு அவளைத் ாராளமாய் போர்த்தியிருந்தது. விசால விழிகளும், பாதாம் ால் நிற சருமமும் அவளைப் பேரழகியாக்க... தன் எழிலை ணர்ந்த அவளும் குதிரைபோல மிடுக்காய் நின்றாள். ாக்கிக் கட்டிய கூந்தல் பேசுகையில் அலட்சியமாய் ழன்றது.

''அங்கு சிறு நீச்சல்குளம் கூட உண்டு. போனால் திரும் வே மனம் வராத இடம். பெயர் என்ன தெரியுமா? - வன ாசம்.''

ஓ! கேளிக்கைக்கூடம் நடத்துபவனாக்கும்! அதுதான் ார்வை, பேச்சு எல்லாம் ஒரு தினுசாய் இருக்கின்றன. னதுக்குள் நொடித்துக் கொண்ட ஜோதிகா,

''அப்போ அங்கு உணவாய் காய் கனிகள் மட்டும் தானே ருக்க வேண்டும்?'' வம்பிற்கு இழுத்தாள்.

''சூழல் மட்டுந்தான் வனம். மற்றபடி வறுத்த கோழி, மீன் கைகள் உண்டு.''

''இயற்கை சூழ்ந்த விடுதிகள் தற்போது அபூர்வம் இல்லையா ஜாதிகா. நீ அதைப் பார்த்தால் அதிகம் ரசிப்பாய்'' என்றார் ாகவன்.

''நான் அழைத்துப் போகிறேன் உங்களை'' என்று உதவிக் ரம் நீட்டிய பிரியாவின் பார்வை மட்டும் தீபன் மீதே ன்றது.

''அவசியம் வாருங்கள் ஜோதிகா. மீண்டும் பார்ப்போம்'' ணிவான குரலில் அழைப்புவிடுத்தவன் 'விருட்'டென்று லகி நடக்க, இவர்களும் நடந்தனர்.



ராகவன் அளித்த அதிர்ச்சி முற்றும் தணியவில்லை என் றாலும் சுற்றிலும் பார்வையோட்டுவதைத் தவிர்க்க முடிய வில்லை, ஜோதிகாவுக்கு.

''எத்தனை அழகு கொட்டிக் கிடக்குது.

எப்படி மனதைத் தட்டிப் பறிக்குது!''

என்று விம்மிப் பாடவேண்டுமளவிற்கு எழிலான இடம்தான், அத்தீவு!

கேரளாவிற்கு உரிய பசுமை.

சுற்றிலும் நீர் தழுவியதால் கிளம்பிய குளுமை.

தென்னை, வாழை, ரப்பர், மிளகுக்கொடிகளும் செறிந்த செழுமை.

ஏலச் செடிகள் பரப்பிய வாசம்.

ஆங்காங்கு 'பளிர்' வண்ணங்களில் மலர் கொத்துக்கள்.

''ஏன் ராகவன் சார் - இதில் 'லேண்ட்ஸ்கேப்பிங்' செய்வது சிரமம்தான். இயற்கை அன்னையோடு நாம் போட்டியிட நினைப்பது மடமையில்லையா?'' சந்தேகம் எழுப்பினாள்.

''மெய்தான், ஜோதிகா. நீ இதை முற்றும் கலைக்க மாட் டாய் என்பது எனக்குத் தெரியும். சிற்சில மாற்றங்கள் போதும்.''

''உம்ம்... தென்னைகளை வெட்ட வேண்டாம். தேவை யான இடங்களில் இரு தென்னைகளுக்கு நடுவே 'ஹேமக்' எனும் வலைத் தொட்டிலைக் கட்டிவிடலாம். அப்படியே ஏதேனும் மரத்தை வெட்ட நேர்ந்தாலும், அதன் தண்டை முழங்கால் உயரத்திற்கு அப்படியே விட்டால் இயற்கை யான காபி டேபிள் தயார். சுற்றிலும் சில மர நாற்காலிகளை போட்டால் மாலைப் பொழுதுகளில் விருந்தினர் அங்கு அமர்ந்து சாப்பிடலாம்... சீட்டாடலாம்...''

''இது போன்ற இடங்களுக்கு வருபவர்கள் பெரும் பாலும் உட்கார்ந்து பீர்தான் அடிப்பார்கள்'' தோள் குலுக்கினாள், பிரியா. குதிநடையில் அவள் இள மேனி குலுங்கியது.

''வயதுக்கு மீறி பேசாதே பிரியா'' அதட்டினார் ராகவன்.

''பதினேழு வயதில் பீர் பற்றிக் கூட பேசக்கூடாதாக்கும். நீங்கள் ஒரு கர்நாடகம்ப்பா. திபன் அப்படியில்லை - அவரோடு சுதந்திரமாய் பேசலாம்.''

தந்தையின் முகம் மாற, ஜோதிகா பேச்சு மாற்றினாள். ''அதோ அதுதான் அரண்மனையா... அற்புத அமைப்பு.''

''ஆமாம். அருகே போய்ப் பார்த்தால் அதன் கட்டிடக் கலை நுணுக்கங்கள் அசரவைக்கும். பெரும்பாலும் தேக்கினாலே இழைக்கப்பட்ட கட்டிடம். மேலிருக்கும் முக்கோண சாளரங்களைப் பார்த்தாயா? தேவையான மட்டும் வெளிச்சம், காற்றை அள்ளி உள்ளே தள்ளும், அவை. இப்போது போல ஆண்டுக்கணக்கில் கல்லூரியில் மெனக்கெடாமல் எப்படித்தான் கட்டிடக் கலையை இத்தனை தெளிவாய் கைவரப் பெற்றார்களோ?''

''அதுவும் இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் விதவிதமான அமைப்பு இல்லையா? நம் ஆட்களை இக்கலையில் அடிச்சுக்கவே முடியாது'' ஆமோதித்தாள் ஜோதிகா.

''காமசூத்ராவிலும் கூட வேறெந்த நாடும் நம்மை அடிச்சுக்க முடியாது'' கட்டை விரலை அசைத்த பிரியாவைச் சுட்டுவிடுவது போல வெறித்தார், ராகவன்!

ஜோதிகாவிற்கும் சங்கடமாய் போனது.

நான்குபுறமும் அகண்ட தாழ்வாரங்கள் பளபளவென மின்ன, நடுவே அலங்காரத் தேர் போன்று நின்றது, மாளிகை.



''இதுதான் பங்களா. நாற்புறம் தாழ்வாரம் சுற்றிய விசால வீடுகள்தானே 'பேங்ளோ' என்று அழைக்கப்படும். இப்போதோ பத்து சென்ட்டிற்குள் நெடுநெடுவென வெறிக்க நிற்கும் வீடுகளைக் கூட அப்படித்தான் - பங்களான்னு அழைக்கிறார்கள்.''

வீட்டினுள் இடையிடையே சில தடுப்புச் சுவர்கள் எழுப்பப்பட்டுக் கொண்டிருந்தன.

''விடுதியாய் மாற்றவேண்டி அதன் அழகை சற்றுப் பாழ்படுத்த வேண்டியதாய்ப் போயிற்று'' என்றார், ராகவன், மெய்யான வருத்தத்துடன்.

''இப்போது உங்கள் தோழியும் வந்துவிட்டார்கள் அல்லவா? இனி தோட்டமும் பாழ்தான்'' கள்ளச் சிரிப்புடன் நழுவினாள், பிரியா.

''மன்னிக்கணும், ஜோதிகா. அவள் சற்று வாயாடி - விஷம வாயாடி.''

''பரவாயில்லை. என் அறை எங்கே?''

''நேரே போனால் பின்னால் படிகள் வரும். மாடி அறைகளில் வேலை பூர்த்தியாகிவிட்டன. முதல் அறை உனக்கென்று தயாராகிவிட்டது. ஜோசப்.'' யாரையோ அழைத்தார். வந்தவனிடம் விசாரித்தார்.

''மேடம் பெட்டிகளையெல்லாம்?''

''பின்புறத்தூடே கொண்டு போயி ஐயா - அம்மிணியை நான் இட்டுப் போகாம்.''

''இதோ அரை மணியில் பெட்டியைப் பிரித்து அடுக்கி விட்டு வந்துவிடுகிறேன், சார். முதலில் இடம் முழுக்க சுற்றிப் பார்த்துவிட்டால் நல்லது... வேலையாட்களைக் காணோமே?''

''மேஸ்திரி நாளை காலை கூட்டி வருவார்.''

நெடுக நடந்துபோய் படியேறினாள். இப்பகுதி வெகு அமைதியாக இருந்தது. மரப்படிகளில் காலடி பதிந்த அரவம் பெரிதாகக் கேட்டது. அறைக் கதவைத் திறந்து விட்ட ஜோசப் சலாமிட்டுக் கிளம்ப, அறையின் அமைதி 'கும்' மென்றது.

அறையின் தோற்றம் பிரமிக்க வைத்தாலும் தனிமை தந்த அச்சம் அவள் பிடரியை 'சில்'லென வருடியது!

## 4



அறை நல்ல விசாலம். குளியலறை வெகு நவீனம்.

சிறு வட்ட குளியல் தொட்டி ரோஜா வண்ணத்தில் மின்ன, மற்ற இடங்கள் வெண்பளிங்கில் வழவழத்தன. கைப்பிடி, குழாய், துவாலைக் கம்பிகள் அனைத்தும் தங்க வண்ணக் குமிழ்கள் பூண்ட கருப்பில்.

காலையில் குளித்திருந்தும் கூட மீண்டும் குளிக்கும் ஆசையைத் தூண்டியது, அறை.

''அதுதான் ராகவனது திறமை'' என்று தனக்குள் பாராட்டிக் கொண்டாள். உள் அலங்காரங்களிலும் கவனம் செலுத்துவார். ஆனால் பெண் மனதைத்தான் புரிந்து கொள்ள முடியவில்லை, அவரால்!

கட்டிடத்தைச் சுற்றும் பசுமையிலும் கவனம் செலுத்துவது இவள் பொறுப்பு. அப்போது வெல்வெட் பேழையுள் வைக்கப்படும் வைர நகை போல... கட்டிடம் தனி சோபை பெறும்.

வேலையில் ஏற்பட்ட பரிச்சயம்தான் இருவருக்கும், ஒத்தநோக்கு, திறமை, ரசனை தொடர்பை நீடித்தன.



''கற்றோரைக் கற்றோரே காமுறுவர்'' என்பதற் கொப்ப எழுந்த பிணைப்பைத்தான் காதல் என்று கருதி விட்டதோ தன் மடநெஞ்சம்?

சற்று முன் தன் நெஞ்சை அறைந்த ஏமாற்றத்தை பெருமூச்செறிந்து அழிக்க முயன்றாள்.

ராகவன் ஏன் தன் குடும்பத்தைப் பற்றி ஒரு வார்த்தை கூட விடவில்லை? தந்தைக்கும் மகளுக்கும் ஒத்துப் போக வில்லை என்பது கண்கூடு. ஆனாலும் அந்தச் சின்னப் பெண்ணின் வாய் கொஞ்சம் நீளந்தான்...

சிரிப்புடன் தனக்காய் வைக்கப்பட்ட தேநீரைப் பருகி விட்டுப் பெட்டியைத் திறந்து, உடைகளை அங்கிருந்த அலமாரியில் அடுக்கத் தொடங்கினாள்.

இப்போது அங்கு நிலவிய அமைதி அத்தனை உறுத்த வில்லை என்றாலும் மகிழ்ச்சியும் தரவில்லை.

ராகவன், பிரியாவின் அறைகள் எங்கே உள்ளன?

அருகே பேச்சுக்குரல் கேட்டுக்கொண்டிருந்தால் இத்தனை தனிமையாயிருக்காது.

இது வனவாசம் போலல்லவா?

வனவாசம் என்றதும், சிந்தனை உடனே அன்று சந்தித்த தீபனிடம் ஓடியது.

தன்னையறியாமல் அவன் தீண்டிய முழங்கையைத் தடவினாள்.

ஏன் இப்படி அவன் தொட்ட இடம் தகிக்கிறது? அவன் பார்வையும் பேச்சும் கூட சுட்டன... இவள் உயிர் வரை வெம்மை பரப்பின.

பிரியா கூடத்தான் அவனிடம் மெழுகாய்க் கரைந்தாள்.

பிரியாவின் அம்மா எங்கே? அவளைப் பற்றி ராகவனிடம் கேட்டிருக்க வேண்டுமோ? இங்கே இருந்திருந்தால் தன்னை வரவேற்க வந்திருக்கக் கூடும். அல்லது வேலையாய் இருந்திருக்கலாம்... இங்கே ஏதோ ஒரு அறையில் இருப்பார்களோ..?

மெல்லிய அவதியை ஒதுக்கிவிட்டு வெளியே கிளம்பினாள். கையில் பெரிய ஓலைத் தொப்பி ஒன்றுடன்.

ஜோதிகா இளம் தேன்நிறம். தேனின் மினுமினுப்பும் தங்க ஜொலிப்பும் கலந்த மேனி. அவள் வேலை வெயிலில் நின்றே கழிப்பது என்றாலும் கதிரவனின் கதிர்கள் அதிகம் தன்னை சேதப்படுத்த விடுவதில்லை. குடை பிடித்துக் கொண்டு வேலையின் மும்முரத்திற்கு ஈடு கொடுப்பது சாத்தியமில்லை என்பதால் இந்த அகலத் தொப்பி.

படியிறங்கி வீட்டின் நீளத்தைக் கடந்து வாசலை அடைவதே ஓர் பிரயாணம் போலிருந்தது. குறிப்பு ஏட்டுடன் சுற்றி வரலானாள். மண்ணை எடுத்து விரல் வழியே வழிய விட்டாள்.

''என்ன மிஸ் ஜோதிகா, புதையல் தேடறீங்களா?'' 'கிணிகிணி'யென்று சிரித்தாள், பிரியா.

''இத்தனை செழிப்பாய் மண் அமைவதே புதையல் போலத்தான். வழக்கமாய் பி.எச். சோதனைக்கு மண் அனுப்புவோம். எந்தச் சத்து இல்லையோ அதைச் செயற்கை முறையில் சேர்த்துப் பிறகு பயன்படுத்துவது தான் முறை. இங்கு அமிலத்தன்மை அதிகமிருக்கும் சுண்ணாம்பு சேர்த்து மண்வளத்தைச் சமப்படுத்த வேணும்.''

''சரி, எப்போ தீபனின் வனத்திற்குப் போகலாம்?''

''நான் வந்த வேலையைப் பார்க்க வேணாமா, பிரியா?''

''இருட்டின பிறகு என்ன வேலை?''



''வரைபடம் தயார் செய்யணும். கிராபில் புள்ளிகளைக் குறிக்கணும். எங்கெங்கே நடைபாதைகள், செடி, மரங்கள்... வேண்டுமானால் ஒரு சிறு குளம்... இவற்றைப் பற்றிய குறிப்புகள்.''

''குளத்திலே ரெண்டு வாத்து, நாலு மீனு...''

''செய்திடுவோம்.''

''ஐய...! நாளை மாலை என்னோடு நீங்கள் கண்டிப்பாய் வரணும்.''

தன் அண்மையை இந்தப் பெண் விரும்புகிறாள் என்ற மகிழ்வில் ஜோதிகாவும். ''கண்டிப்பாய்'' என்று சம்மதித்தாள்.

மதியம் வயிறு பசியில் கிள்ளி ''இது சாப்பாட்டு நேரம்'' என்பதை உணர்த்தியது. வீட்டில் நுழைந்து உணவு மணம் கிளர்ந்த இடம் நோக்கி நாய்குட்டி போல நடந்தாள்.

''யாரங்கே?'' ஏதோ சரித்திர நாயகி போல குரல் எழுப்பினாள்.

''வரு அம்மிணி'' அழைப்பு வந்தது.

''ராகவன் சார் இல்லையா?''

''மூணு மணிக்கு தன்னே சாரு ஊணு கழிக்கும். நிங்கள் இருக்காம்'' பாதியளவே எட்டிப் பார்த்த பெண் உபசரித்தாள்.

''எம்பேர் ஜோதிகா. இங்கே தோட்டம் அமைக்க வந்திருக்கேன். தமிழ் புரியுதா?''

''பின்னே?'' புன்னகையில் விரிந்த முகம் முழு அழகு தான். குண்டு கன்னங்கள். வட்ட நிலா ஜாடை. மூக்கும் உதடுகளும் சின்னஞ் சிறியதாய் கிள்ளிவைத்தாற் போலிருக்க அதற்கு நேர்மாறாய் நீளமாய் ஓடிய விழிகள். முண்டும் சிறு

துண்டும் மறைக்க முடியாது தோற்ற வாளிப்பான உடல் வாகு.

இவள் அவளை ரசித்தது போலவே அந்தப் பெண்ணும் இவள் பொலிவை வியந்து ரசித்தாள்.

''அம்மிணி... வளர சௌந்தரியமாயிட்டு உண்டு.''

''நீயும் சுந்தரிதான்'' மலையாளத்தை ஒட்டி வார்த்தை கோர்த்தாள் ஜோதிகா.

''எம்பேரு ரஞ்சனி.''

''பசிக்குது ரஞ்சனி. என்ன இருக்குது?''

பரபரவென்று மேசையைப் பதார்த்தங்களால் நிறைத்தாள். ரஞ்சனி ''கால வெள்ளென ரொட்டி, பால், பழமெல்லாம் ரூமுக்கே கொண்டு வராம் அம்மிணி.''

''அடடே... சொகுசான வாழ்க்கைதான்! அவியல் ஜோராயிருக்கு. குழம்புதான் காரமில்லை.''

''கார கருவாட்டுக் கறி உண்ணுமோ?''

''கொண்டு வா. கூட அரைத் தட்டு சாதம் இழுக்கும்.''

எண்ணெயும் வெங்காயமும் மிதந்த சிவப்புக் குழம்பை சுவைத்து உண்டாள். இவள் உண்பதை சற்றுப் பெருமிதமாய்ப் பார்த்து, நின்ற ரஞ்சனியிடம்... கேட்டால் என்ன?

''ராகவன் சார் சில வாரங்களாய் இங்கிருந்திருப்பார். பிரியாவைப் பார்த்தேன். ஆனால் அவர் மனைவி...? நான் பார்க்கலை.. அவங்க எங்கே?''

ரஞ்சனியின் மலர்ந்த முகம் மறுநொடி கூம்பிக் கொண்டது. லேசாக அச்சம் பரவிய விழிகளைத் திருப்பிக் கொண்டாள். முணுமுணுத்தாள்!



''ஐயோ... ஞான் அதொன்னும் அறியில்லே அம்மிணி...''

ரஞ்சினியின் பயம் இவளையும் பதட்டப்படுத்தியது.

## 5



வரை படங்களையும், குறியீடுகளையும் போட்டு வைத்த பின், வீட்டிற்கும் கடிதம் எழுதினாள், ஜோதிகா. பிரயாணம் பற்றி இவ்விடத்து எழில் பற்றி... பிரியா பற்றியும் கூட! வந்த உடனே ''பேசி''யில் இவற்றைத் தெரிவித்திருக்கக் கூடுமானால் நல்லதாயிருக்கும். ஆனால் அவ்வப்போது கிணுகிணுத்து வெளியே இருந்து தகவல்களை இவர்களுக்கு அளித்த ''பேசி'' அதன் மூலம் வெளியே தொடர்பு கொள்ள முனையும்போது 'கொர்' என்று தூங்கியது!

படுக்கையில் சரிந்தாள். அப்போதுதான் உடம்பின் அசதி புரிந்தது. இதுவும் பழகிப்போன ஒன்றுதான், இங்காவது நாவிற்குத் தோதான உணவு கிடைக்கிறது. வட இந்தியாவில் கறை படிந்த சுவர்கள், பழுப்பேறிய படுக்கை விரிப்புகள், கொசு, மூட்டைப் பூச்சி என்று மல்லாடியதும் உண்டு.

கண் மூடியவளுக்கு உறக்கம் வரவில்லை. ராகவனுக்குத் திருமணமாகி விட்டது என்ற நினைப்புதான் வந்தது!

அவர் மனைவி...? ஒருவேளை இங்கு ஏதோ ஓர் அறையில்... பைத்தியமாய் அடைபட்டிருக்கிறாளோ?

சேச்சே... சமீபத்தில் ''சாந்தி நிலையம்'' என்ற பழைய சினிமா பார்த்த பாதிப்பு இது! விறைப்புப் பார்வையுடன் முக்காடிட்ட ரஞ்சனி, திருமதி ராகவனுக்கு சாப்பாடு எடுத்துப் போவது போலக் கூட ஓடியது கற்பனை.

''கெக்... கெக்... கே!'' என்று ஊளைச் சிரிப்பு இரவை ஊடுருவுமோ? பயம் அவளுக்குள் நகம் நீட்டியது!

''கண்ட கற்பனையும் செய்து அவதிப்படணுமா?'' என்று தன்னையே கடிந்துகொண்டவள், முழங்கால்களை மடக்கி போர்வைக்குள் சுருண்டாள்.

மெல்ல உறக்கம் நெருங்கி அவளைத் தழுவும் நேரம் தான் அந்த ஓசை கேட்டது!

சிரிப்பு அல்ல.. அழுகை... ஊகூம்... மெல்லிய விசும்பல்.

கடவுளே, யாரது? அது பெண்ணின் தேம்பல் பிரியாவா? ரஞ்சனியா?

ரஞ்சனி தன் கணவனுடன் கீழே சமையலறைக்கு மறுபக்கம் தங்கியிருந்ததாக கூறியிருந்தார். ராகவன் பிரியா அறைகளும் கீழேதான்... இங்கே யார்? விசும்பல் பக்கத்திலிருந்து கேட்கிறதே? நூறு ஆண்டுக்கு முன் இங்கே சிறை வைக்கப்பட்ட இளவரசியா? கணவனால் வெறுத்து ஒதுக்கப்பட்ட பட்டத்து ராணியா? எதிரிகள் முற்றுகையிட்டு நாசம் பண்ணின ஒரு கேரளத்து அழகியின் ஆவியா? வியர்த்தது. மூச்சு தாறுமாறானது. பந்தாகச் சுருண்டு கிடந்தாள்.

விரைவில் அழுகை ஓய்ந்தது என்றாலும், இவளுக்கு உறக்கம் மீண்டும் வர வெகு பொழுதானது.

காலையில் உடல் தளர்ந்து ஆழ்ந்த நித்திரையிலிருந்தவளைப் 'படபட' வென்ற கதவு தட்டல் உலுக்கியது.

''யாரது?''

''நாந்தன்னே அம்மிணி...'' ரஞ்சனியின் கொஞ்சல் மலையாளம் அழைத்தது. ''உறக்கம் சரியில்லையோ? புது இடத்திலே சிலப்போது வராதங்கிலோ?''



''வரலைதான். பக்கத்து அறையிலே யார் ரஞ்சனி?''

''பிரியா அம்மிணிதான்... நிங்கள் இங்கு உண்டெங்கி அவங்களும் மேல் வந்து.''

நிம்மதிப் பெருமூச்சு நீண்டது.

''காபியா... நன்றி ரஞ்சனி.''

''நாளைக்கு குறைச்ச நேரங் கழிச்சு காபி எடுத்த ரட்டே?''

''இல்லையில்லை. ஆறரை சரியான நேரந்தான்.''

நேற்றைய திகிலை நினைத்தபோது இன்று சிரிப்பு பொ கியது, காலை கடன்களை முடித்தவள் பத்தாம் நிமிட அடுத்த அறையின் கதவைத் தட்டினாள்.

கதவைத் திறந்த பிரியாவின் விழிகள் சற்றே சிவந் தடித்திருந்தன. அலங்காரம் அலட்டல் இல்லாமல் சிறு போலவே அந்நேரம் தோன்றினாள்.

''காய்ச்சலா பிரியா?'' நெற்றியை வருடிக் கேட்டாள்.

''ம்ப்ச்.''

''அழுதியா, என்ன?''

''ப்ச்.''

''என்ன பிரியா? மனசோ உடம்போ எது சரியில்லை னாலும் வெளியே சொன்னால்ல தெரியும்? மூடி மறுகிவ அவதிதான்.''

கனிவான விசாரிப்பில் மீண்டும் விசும்பல் வெடித்த ''எங்கம்மா இருந்திருந்தா எனக்கிந்த நிலை இல்லையே அப்பாவுக்கு சதா வேலை தான். நீங்களும் மண் சோதனை சுண்ணாம்புச் சத்து மரஞ்செடிங்கறீங்க... எனக்குப் பொழு போகலை. நேத்து அம்மா ஞாபகம் வேற...''

ஜோதிகாவின் மனம் பாகாய் இளகியது. அப்படியானால் இந்தப் பெண்ணிற்குத் தாயில்லையா? அந்த சோகத்தைத் தான் மூடு மந்திரமாய் வைத்திருக்கிறார்களா?

''இன்னைக்கு உன் கூட வனவாசம் வர்ரேனே - சீதையைப் போல.''

கண்ணீரூடே புன்னகைத்தாள், பிரியா.

''நீங்களும் அப்பா போலவே 'கருமமே கண்ணாயினார்' ரகம். பிறகு மறந்திடுவீங்க அல்லது வேலையிருக்குதுன்னு மறுத்திடுவீங்க.''

''மாலைக்கான வேலைத் திட்டமே இதுதான். பேசிட்டே யாம் வனவாசம் போவோம்.''

கவிதை நடையில் பேசினாள்.

''தீபனோடு காபி சாப்பிடலாம், இல்லியா?''

''அவர் உன்னைவிட ரொம்ப மூத்தவர். இப்படித்தான் பெயர் சொல்றதா?''

''அங்கே வர்ற எல்லாருக்குமே அவர் தீபன்தான். அவர் கண்களின் கவர்ச்சிக்காகவே அங்கு பெருங்கூட்டம் கூடும்...''

''போதும் போதும். மீதி அப்புறம்'' பேச்சைக் கத்தரித்து தன் அறைக்குத் திரும்பியவள், வெளியே செல்லத் தயாராகி, பின் வழக்கம் போல வேலையில் அமிழ்ந்துபோனாள். தனது திட்டங்களை ராகவனோடு கலந்து விவாதித்து சிற்சில மாற்றங்களைச் செய்தாள்.

''டெய்சி, ஆர்கிட் இந்த இரு மலர் செடிகளை மட்டும் முன்புறம் வைத்தால் போதும்.''

''இரண்டே நிறங்கள் மட்டுமா?''

இல்லை. இரு சாதிகள் மட்டும். டெய்சியிலேயே வெள்ளை, ஊதா, ரோஸ், மஞ்சள் என்று பல வண்ணங்கள் உண்டே,



ஆர்கிட் அபூர்வ சாதி. தென்னை மரத்தின் மீது கூடப் படர்ந்து செழிக்கும். தென்னை முதுகில் பூவாய் மலர்ந்து நிற்கும்.''

வேண்டிய ரக மண்ணிற்கும் ஏற்பாடு செய்தவள், தான் பிரியாவுடன் தீவு தாண்டி போவதைக் குறிப்பிட்டாள்.

''அங்கு போக படகிலா போகவேணும் சார்?''

''இல்லை. 'வனத்'திற்குப் போக ஒரு மூங்கில் பாலம் உண்டு. ஆனால்?''

''சொல்லுங்க.''

''இருட்டியபின் பாதை சரியாய் தெரியாது. காட்டுப் பகுதி அது. நம் வீடு இரவில் மூடப்பட்டுவிடுவதால் உனக்கு யானையின் பிளிறல், பிறவற்றின் உருமல்கள் கேட்க வில்லை.''

''போச்சுடா... இது வேறா?'' தனக்குள் முனகிக் கொண் டாள், ஜோதிகா.

''ஆனால், வெளியே கலவையான மிருக ஒலிகள் கேட்கும் மின்விளக்குகள் கிடையாது.''

ஜோதிகாவிற்கு சற்று நெருடியது.

''இந்த விபரங்கள் எல்லாம் அறியாமல் பிரியாவோடு வர சம்மதித்து விட்டேனே சார்?''

''சீக்கிரம் திரும்பிவிடுங்கள். தவிர...'' தயங்கினார்.

''சொல்லுங்க.''

''தீபனோடு பிரியா அதிகம் பழகுவது உசிதமாய்ப் படவில்லை. இவள் வாயாடியானாலும் வெகுளி. அவனோ உலகத்தையெல்லாம் புரட்டிப் பார்த்த முழு ஆண். அவன் வசீகரமும் தனி. ஆக...''

''புரியுது சார். போய்விட்டு - அவர் வீடு வரும்முன் பிரியாவைத் திரும்ப அழைத்து வந்துவிடுகிறேன்.''

''அவளுக்கு நல்ல புத்தியும் சொல்லி வை, ஜோதிகா. நீ அவள்மேல் ஒரு கண், வைத்துக்கொண்டால் எனக்கு அது நிம்மதி. அவள் தாய் இருந்திருந்தால் இதெல்லாம் அவள் பொறுப்பாய் இருந்திருக்கும்... மன்னிக்கணும்... உனக்குத் தொந்தரவு...''

ஜோதிகாவிற்கு பாவமாய், துளி மகிழ்ச்சியாய் இருந்தது. தன் மகளின் பொறுப்பைத் தன்னிடம் ஒப்படைக்கிறார் என்றால் தன்னிடம் ராகவனுக்கு அத்தனை நெருக்கம், நம்பிக்கை உள்ளது என்று தானே பொருள்!

அந்தத் திருப்தியோடு அன்று மாலை பிரியாவுடன் நடக்கத் தொடங்கியவள், சற்று நேரத்தில் நேரிடப் போகும் பயங்கர அனுபவம் அறியாததால் வெகு உல்லாசமாகவே இருந்தாள்.

## 6



அச்சிறு பெண்ணிற்கு அத்தனை ஆத்திரம் வரும் என்று ஜோதிகா எதிர்பார்க்கவில்லை.

''என்னை ஏமாற்றிவிட்டாய் நீ...'' என்று பிரியா பல்லைக் கடித்தபோது வெலவெலத்துவிட்டது.

''இருட்டிவிட்டதே பிரியா. இனியும் இதேபோல ஒரு மணி நேரம் நடந்த பிறகுதானே வீடு வரும்?''

''கையிலே டார்ச் இருக்கில்ல? தீபனோடு காபி அருந்தி விட்டு வரலாம்னு சொன்னேனே. அவர் நம்ப வீடு வரை வந்து விட்டுவிடுவார்.''



''சொல்லாமல் வந்து நின்று, காபி தா, ஒரு மணி நேரம் நடந்து துணையாய் வா என்பது முறையில்லையே...''

''அப்பா போலவே ஏமாற்ற, பசப்பலாய்ப் பேசப் பழ கிட்ட நீயும். அப்பாவும் நீயும் மணிக்கணக்காய் பேசறது தப் பில்லை. அது வேலை. இதுன்னா லீலையா?'' மூச்சிரைக்க வார்த்தைகளை விசிறினாள்.

''வரும் ஞாயிறு அன்று மதியமே இங்கே வருவோம்.''

''இனி உன்கூட வருவதாவது. இனி துணையின்றி நீ 'வனவாசம்' வரக்கூடாதுன்னு அவர் எனக்கு உத்திரவிட்ட தால்தான் உன்னைத் தாஜாபண்ணிக் கூப்பிட்டேன். இப்ப முடியாதுன்னு... புத்தியைக் காட்டிட்ட...''

''ஆமா பிரியா. இப்போ திரும்பலாமா...''

ஜோதிகாவிற்கும் தன் ஆத்திரத்தை அடக்க முடிய வில்லை - அதட்டினாள்.

பிரியா 'விருட்'டென நடந்தாள். ஜோதிகாவிற்கு அது புதிய பாதை என்பதால் அத்தனை வேகத்திற்கு ஈடுதர முடியவில்லை காலைச் சற்று கவனமாய் வைத்தே நடந் தாள். பாதையில் அட்டை, நட்டுவாக்கிளி, பாம்பும் கூட உண்டு என்று ஜோசப் எச்சரித்திருந்ததால் இந்த முன்ஜாக் கிரதை தேவைப்பட்டது.

அரை இருளில் பாதை ஓர முரட்டு வேர்களும் கூட பார்வைக்கு அரவங்களாய் நெளிந்தன.

''பிரியா... நில். எனக்கு வெளிச்சமே தெரியலை.'' குரல் கொடுத்தாள்.

''அவசியமில்லை.''

''விளையாடாதே. எனக்கிது பழக்கமில்லாத பாதை.''

''அப்போ தீபன் வீட்டிற்குப் போகலாமா?''

''சே... என்ன பெண் நீ!''

இவ்வார்த்தைகள் பிரியாவின் ஆத்திரத்தை விசிறி விட்டிருக்க வேண்டும். ''இருட்டிலே துழாவி தவழ்ந்து வா. திமிர் அடங்கிவிடும்.'' என்று சீறிவிட்டு ஓடத் தொடங்கினாள். கூடவே 'விலுக் விலுக்' என்று குதித்த டார்ச் ஒளி தள்ளிப்போய் மறைய ஜோதிகாவை திகில் தழுவியது.

சுற்றிலும் பூதாகாரமாய் நின்ற கரிய மரங்கள் கிளைகளால் அவளை இழுத்து இறுக்க முனைவது போன்றதொரு பய பிரமை. இலைகளை உரசிய காற்று இவள் நடுக்கத்தை அதிகரித்தது... சுற்றிலும் மயான அமைதி.

சற்று பொழுதில் மிருகங்களின் நடமாட்டமும் தொடங்கி விடுமோ? உறைந்துபோனாள்... முழுக்க இருட்டும் முன் வீடு சேரவேண்டும் என்ற எச்சரிக்கை உந்த ஓட எத்தனித்தாள்.

பெரிய வேர் தடுக்கியது.... விழுந்தவள் இனமறியாத பீதியில் அலறி எழுந்தாள்.

''பரவாயில்லையே, வந்த மறுநாளே என்னைப் பார்க்கக் கிளம்பிட்டீங்க?''

கேலி பேசிய தீபனின் விழிகள் அவளுக்கு வெகு அருகில் பளபளத்தன. அவளுக்குள் வெம்மை பரவியது. விழிகளை மூடிக் கொண்டாள்.

''என்ன தலைவலியா? மயக்கமா... அல்லது வெட்கமா?'' குழைவாக வினவியவனது விரல்கள் மென்மையாய் அவள் தலையை நீவின.

''இல்ல... பிரியா கூட வந்தேன்... அவள் சற்று விரைந்து போய் எனக்கு வெளிச்சம் போதாமல் எதிலோ தடுக்கி... நீங்கள் எப்படி?''



''எட்டூருக்குக் கேட்கும்படியாய் 'அம்மா' என்று ஒரு கூச்சல் போட்டீர்களே... அதில் விழுந்தடித்து ஓடி வந்தேன்.''

''மன்னிக்கணும். அநாவசியமாய் பயந்திட்டேன்.''

''வனச்சூழல் உங்களுக்குப் புதிதல்லவா? ஒருமையில் விளித்தால் போதுமல்லவா? நெருங்கி வந்துவிட்டோம்.'' குறும்பாய்ப் பேசினான்.

''இந்நேரம் எதற்கு இங்கே வர வேண்டும்? இங்கே விழுந்ததால் உதவிக்கு உடனே நான் வர முடிந்தது. நடு வழியில் என்றால் காலை வரை ஒநாய், கரடிகளைத் துணைக்கு வைத்துக் கொண்டுதான்...''

''ஐயோ... போதும் போதும்.''

''அத்தனை பயமா? சரி இப்போது திரும்ப வேண்டுமே என் 'பைக்கில் கொண்டு விட எனக்கு சம்மதம். உனக்கு?''

''நன்றி. கால் ஊன்ற முடியவில்லை...''

''ஓ... ஊன்ற முடிந்தால் நடந்தே வீடு போய்ச் சேர்ந்து விடுவீர்களாக்கும்?''

இதழ்களை கடித்துக் கொண்டாள்.

இருவரும் அவனது இடத்துக்கு சென்றார்கள்.

''விரல் நகம் பெயர்ந்திருக்கிறது. கட்டுப் போட்டு விடுகிறேன். தினம் பிரித்து இந்த மருந்தைத் தடவிக் கொண்டால் வலி தெரியாது. சீக்கிரம் ஆறும்.''

''நன்றி.''

''ஞாயிறு காலை மறுபடி வாருங்களேன். அழகிய இடம் இது. சுற்றிப் பார்த்து விட்டு இருட்டும் முன் திரும்பி விடலாம்.''

''சரி, பிரியாவுடன்...''

''இனி தனியாய் இங்கு வரவேண்டாமென்று நான் சொன்னதால் தான் அவள் உங்களையும் இழுத்திருக்கிறாள். பாதி வழியில் இப்படி உன்னைத் தனியே விட்டு ஓடி...''

கோபத்தில் சிவந்த அவன் விழிகளைப் பார்த்த இவளும் அச்சம் உணர்ந்தாள்.

''வெறும் பால்தான் தந்தேன். தோசை வார்க்கட்டுமா பசிக்குமே?''

அவன் வீட்டின் உள் அறையிலிருந்து ஏதோ அரவங் கேட்டது. அது யாராவது அழகிய பெண்ணாய்தான் இருக் கும் என்று கருதியவள், ''உள்ளே விருந்தினர் இருக்கிறார்கள் போல... எனக்காய் அங்கே ராகவன் காத்திருப்பார். நேர மாச்சு கிளம்பணும்'' என்றாள்.

''தனியே இங்கே புது ஊருக்கு வந்தாயிற்று. அதுவும் ராகவன் பற்றி விபரங்கள் ஏதும் அறியாத நிலையில்... அப்படி துணிந்து வரும் நீ இப்படி பயப்படலாமா?''

''நான் வந்தது வேலைக்காக'' கடுகடுத்தாள்.

''என்ன மாதிரி வேலை'' அவன் புருவம் உயர்த்திய விதம் அவளை வெறுப்பேற்றியது.

''தோட்டத்தோடு முடியும் வேலை. நீங்கள் நினைப்பது போன்ற ஆளில்லை நான்.''

''ஆ... சின்னஞ்சிறு தேவிக்கு கோபம் பெரிதாகத்தான் வருகின்றது.''

''அதென்ன?''

''அடிக்கடி கோப்பெருந்தேவி காலத்து பாணியில் ஒரு கண்ணகி முறைப்புத் தருகிறாய்! ஆள் என்னவோ ஒடிசலாய் கொடி போன்று இருப்பதால் சின்னஞ்சிறு தேவி என்று பெயர் சூட்டியிருக்கிறேன்.''



''மீண்டும் நன்றி ஒரு டார்ச் தந்தீர்களானால் கிளம்பு கிறேன்.''

''சரி, வழி தெரியுமில்லையா?'' பணிவோடு டார்ச்சை நீட்டினான்.

பாதி ஆத்திரமும் மீதி அழுகையுமான இவளது முறைப்பை ரசித்தவன், ''ஏன் இப்படி முரண்டு செய்கிறாய், தேவி?'' கொஞ்சினான். ''என்னை பத்திரமாய் கொண்டு போய் சேருங்கள் தீபன் என்று எனக்கு உத்திரவிட வேண்டியது தானே!''

''மேற்கொண்டு பேசாமல் கூட்டிப்போனால் நலம்'' முகம் இறுக்கினாள்.

''மனசில்லைதான். ஆனால் ராகவன் தேடுவாரே!'' இவளைப் போல ஒரு போலிக் குரலில் அலுத்தவன் 'பைக்' கை கிளப்பினான்.

''கா... கார் இல்லையா?''

''இருக்கே. சுமோ.''

''அப்போ அதிலேயே....''

''ஓ! மேடு பள்ளங்களில் என் முதுகில் உரசிக் கொண்டு பயணிக்க பயம். உரசியதும் தீக்குச்சி போல பற்றிக் கொள்ளுமோ என்கிற அச்சம். காரில் என்றால் கண்ணிய மாய்...''

''புரிகின்றது அல்லவா? செய்யுங்கள்.''

''மன்னிக்கணும் தேவி. கார் மறுபக்கம் இருக்கும் நல்ல சாலையில் பயணிக்க மட்டும்தான். இந்த ஒற்றையடிப் பாதைக்கு பைக் மட்டும்தான் சரி, பிடிக்கவில்லையென் றால் இரவு இங்கேயே தங்கிவிட்டு... விடிந்ததும் பொடி நடையாய்...''

ஜோதிகா மறுபேச்சின்றி 'பைக்'கில் ஏறி அமர்ந்து விட்டாள்!

## 7



அன்றிரவும் சரியான தூக்கமில்லை. அவன் மீது உரசிய, அழுந்திய இடங்களில் எல்லாம் கங்கு தடவியது போன்ற தகிப்பு. விழுந்துவிடக் கூடாதே என்ற பதட்டத்தில் அவன் தோள்களை அணைத்துக் கிடந்த கைகளில் இன்பப் பரபரப்பு இன்னும் மிச்சமிருந்தது. அடர்ந்த கானகத்தில் தனித்துக்கிடந்த அச்சம்... என்று நினைவுகளில் உடல் புரண்டு புரண்டு தவித்தது.

காலையில் விழிகளைத் திறக்க முடியவில்லை. தணல் வைத்துக் கட்டினாற்போல எரிந்தன... உடல் முழுக்க வேதனை... முணங்கினாள்.

நேற்றிரவு ரஞ்சனிதான் நைந்து வந்தவளை ஏந்திக் கொண்டாள்.

''ஐயோ... அம்மிணிக்கு எந்தானது'' என்றபடி அவள் கரைத்தச் சோற்றை குடித்த பிறகுதான் உயிர் மீண்டது. இப்போது காய்ச்சல் - நாவு உணர்ந்த கசப்பை மனதும் உணர்கின்றது. எத்தனை அரக்கக் குணம் பிரியாவிற்கு!

அவள் அப்பாவிடம் சொல்லிவிடலாம் தான்... ஆனால் பிறகு பிரியா தன்னிடம் முகம் கொடுத்துப் பேசுவாளா? தாயற்ற குமைச்சலில் அச்சிறு பெண் அறியாமல் செய்து விட்டதாக உதறிவிட வேண்டியதுதான். கோள் சொல்லி புண்ணைப் பிசைந்து விடுவானேன்?



தீபனைக் காணாததில் பிரியாவிற்கு ஏன் அத்தனை வெறி? அவளும் அவன் தீண்டலின் சுகத்தை அனுபவித்திருப் பாளோ? மூச்சுக் காற்றுபடும் நெருக்கத்தில் கிறங்கியிருப் பாளோ? நேற்றிரவு அச்சத்தில் நினைவிழந்து கிடந்த தருணத்திலும் கூட அவன் அணைப்பில் தான் குழைய வில்லையா?

உடம்பு குன்றியது. எழுந்து தடுமாறி நடந்து தாழ்விலக் கினாள். ''அம்மிணி, ஞான் பேடிச்சுபோயி... காலையில கதவுத் திறக்கான் இல்லியே...''

''காய்ச்சல் ரஞ்சனி.''

''ஐயோடா... ஈ நேச சமயத்திலேயானு?''

''உடம்பு வலிதான். மாத்திரை இருக்குது. போட்டால் சரியாகிடும்.''

''கொதி வெள்ளத்தில் ஞான் தைலம் இட்டுத் தராம். மேலுக்கு விட்டால் உடம்பு பஞ்சு போலாகும்.''

''சரி.''

''கசாயங்கூட வச்சு தராம்.''

''நன்றி.''

''என்ற யேசுவே... எந்து சோதனையிது. ரக்சிக் கணும்ப்பா.''

புலம்பலுடன் ரஞ்சனி வெந்நீர் விளாவி தைல சொட்டுக் களை விட குப்பென்று நீரின் ஆவியோடு மணம் பரவியது. ஆழ்ந்து சுவாசிக்க இதமாயிருந்தது.

ஜோதிகா குளித்து, மண் கறைபட்ட உடைகளை மாற்றி, ரஞ்சனி பரிமாறிய வதக்கிய ரொட்டியை, கசாயத்தோடு உள்ளிறக்கியபின் மாத்திரையும் விழுங்கினாள்.

''இப்ப தேவலை, ரஞ்சனி. நீ இல்லைன்னா சிரமப்பட்டிருப்பேன். ரொம்ப நன்றி.''

''நன்றியெல்லாம் கர்த்தருக்குத்தன்னே. ஒருத்தருக்கொருத்தர் சின்ன ஒத்தாசை.''

உண்மைதான். மனித பிறப்பில் ஒருவருக்கொருவர் உதவிகளும் விட்டுக்கொடுத்தலும் மன்னிப்பும், பிரியமும் இல்லாவிடில் உறவுகள், ஏன் உலகமே சாத்தியமில்லை. எழுந்த ஞானம், உள்ளே குமுறிய உலை உணர்வுகளை மூடிவிட, பிரியா மீதிருந்த காழ்ப்பு குறைந்துபோனது.

அறியாமல் செய்து விட்டாள்... பாவம், அவளுக்கெத்தனை சஞ்சலமோ? நினைத்தவள், ''ரஞ்சனி... பிரியா எங்கே?'' என்று கேட்டாள்.

''அம்மிணியும் சாரும் நேற்று ராவே ஊருக்குப் போய் தன்னே.''

கிடைத்த பதிலில் ஜோதிகாவுக்கு 'கப்' பென்று மூச்சை அடைத்தது! ''எ... எங்கே?''

''கொச்சினுக்காயிருக்கும். சாருக்கு போன் வந்து... பின்ன அவசரமாயிட்டு சார் கிளம்பிய சமயம் அம்மணியும் வந்து அச்சனோடு கிளம்பிப் போயி...''

'எத்தனை திண்ணக்கமிருந்தால் தன்னை திக்கு திசையறியாத இருளில் விட்டுவிட்டு வந்தபின்னும் அது பற்றி ஒரு வார்த்தை, உறுத்தலின்றி ஊருக்குக் கிளம்பியிருப்பாள், இந்த பிரியா?'

சற்று முன் இளகிய மனம் இறுகியது.

'ராகவனும் கூட புது ஊரில் மசங்கிய வேளையில் இவள் எங்கே போயிருப்பாள்? ஏன் திரும்பவில்லை' என்ற சிந்தனையற்று. ஒரு தகவல் சீட்டும் எழுதி வைக்காமல் போனது - கடுமையாய் உறுத்தியது.



''அதனாலத்தன்னே ஞான் பேடிச்ச போயி, அம்மிணி காலிலே கட்டும் கலைஞ்ச முடியுமாய் வந்தப்போ... கலங்கிப்போயி... ஞான்தன்னே பொறுப்பு?'' மறுகிய ரஞ்சனியின் கையை ஆதரவாய்ப் பற்றிக்கொண்டாள், ஜோதிகா.

''உன் பொறுப்பை நீ செவ்வனே செய்தாச்சு ரஞ்சனி'' புன்னகைத்தாள்.

அவள் போனபின் மாத்திரை உதவியால் உறக்கம் சொக்கியது. விடியலில் விழித்தபோது உடல் நலம் தேறியிருந்தது.

'அட...அவ்வளவுதான் உலகம்' என்ற வேதாந்த சமாதானத்துடன் உடை மாற்றி வேலைக்கு கீழிறங்கி விட்டாள்.

சூடான ரசம் சோறும் புதினாத்துவையலும் சுவைத்தன. தொப்பியை போட்டுக் கொண்டவள் மேஸ்திரியிடம் போனாள். வரைபடத்தைக் காட்டி அதே முறையில் சில இடங்களை வெட்டி, சமன்படுத்தச் செய்தாள்.

''படிக்கட்டு போன்ற அமைப்பு. இல்லியாங்கம்மா.''

''ஆமாம். பரப்புகளில் வெளிநாட்டு புல் வகையும், ஓரங்களில் பூப்பாத்திகளுமாய் நிலம் அடுக்கடுக்காய் பிரில் பாவாடை போல விரியும் - நடுவே அரண்மனை!''

''அருமையாய் இருக்குமம்மா. இப்போது ஐந்து பேர் தான் இங்க வேலைக்கு உண்டு. கடும் உழைப்பாளிகள் என்றாலும் வேலை துரித கதியில் இல்லை.''

அந்த இடத்தைவிட்டு விரைவில் கிளம்பினால் நல்லது என்று தோன்ற -

''திங்கட்கிழமையிலிருந்து அதிக ஆட்களை நியமித்தால் நல்லது. மேஸ்திரி. விடுவிடுவென்று வேலை முடிந்தால் நல்லது. பிறகுதானே விதைக்க முடியும்? செடிகளும் ஒரே இரவில் முளைத்து பூத்து நிக்காதே!'' என்றாள்.

''அது சரிதாம்மா.''

''இடது புறமாய் நிலாத் தோட்டம் ஒன்று அமைக்கலாம் என்றிருக்கிறேன்.''

தோட்டம் முழுக்கதான் நிலா காயுமே? என்ற தினுசில் மேஸ்திரி விழிக்க இவள் விளக்கினாள்.

''முழுக்க வெள்ளை மலர்கள் மட்டுமே அப்பகுதியில் இருக்க வேணும். தனிப் பகுதியை அதற்காக வளைத்து விடுங்கள்... இதோ இந்த அளவில்...'' வரை படத்தைக் காட்டினாள்.

''சரிங்கம்மா.''

''பிச்சி, முல்லை, மல்லிகை, இரவு ராணி, பவழமல்லி வேலியோரம் வெள்ளைக்கொத்து ரோஜாப் பந்தல் என்று எல்லா வெண் மலர்களும்... வாசனையுமாய்...''

''இருப்பதுதான் நிலாத் தோட்டமா? காதலர்களுக்கு ஏற்ற இடம்'' என்று பாராட்டிடய குரலில் நிமிர்ந்தாள்.

இத்தனை ஆண்மை ததும்பும் கேலிக் குரல் வேறு யாருடையது - எதிரே வந்து நின்றது தீபன்தான்!

''என்ன.. இங்கே? ராகவன் இங்கில்லை... அதாவது ஊரில் இல்லை...'' குழறினாள்.

''இல்லீங்கம்மா. ஐயா காலையிலேயே ஒருமுறை உங்களைத் தேடி வந்து விசாரித்தார். இப்போ மறுபடி... நான் அப்போ வேலையை ஆட்களுக்கு சொல்லிடறேம்மா'' மேஸ்திரி நகர்ந்தார்.

''காயம் எப்படி வலி குறைஞ்சிருக்கா?''

சிலையாய் நின்றாள்.

''காய்ச்சலாமே? அதோடு இப்படி வெயிலிலே காய என்ன அவசியம்? மேஸ்திரியை வீட்டிற்குள் அழைத்து இதே



நிலாத்தோட்டத்தை விவரிக்க முடியாதா?'' பரிவான அதட்டலிருந்தது குரலில்.

தொண்டையடைத்துப் போக பதில் தராமல் நின்றாள், ஜோதிகா.

''காலுக்கு மருந்து போட்டாச்சு, இல்லையா?''

''இ... இல்லை.''

''முதல்ல அதைச் செய். மேஸ்திரி! அம்மா வீட்டின் ஹாலில் இருப்பாங்க. வேண்டிய விபரங்களைப் போய்க் கேட்டுக்கோங்க'' என்று உத்தரவிட்டவன், அவளைப் பற்றி இழுக்காத குறையாக வீட்டினுள் இட்டுச் சென்றான்.

''இந்த இடப்புற இரண்டாம் அறை புத்தக வாசிப்பு அறை அதிலிருந்து ஏதாவது பத்திரிகைகளேனும் எடுத்து வாசிப்பதற்கென்ன? முழு நேரமும் வேலைதானா? இந்த ஞாயிறு காலை.. என் அழைப்பு நினைவு உண்டுதானே?''

பதில் பேச நா எழவில்லை. ஆனால் அப்படியே அவன் பரந்த மார்பில் சாய்ந்து கொள்ள வேண்டும் போல உடல் தொய்ந்தது... உள்ளம் கெஞ்சியது. இப்படியொரு எண்ணம் ஏன் வருகிறது -

திகைத்தபடி நின்றாள்.

## 8



அன்றும் மறுநாளும் வேலை தடையின்றி நடந்தது. மூன்றில் ஒரு பகுதி இவள் திட்டமிட்டபடி உருவாகி விட்டதில் மகிழ்ந்து போனாள். மாலையில் படகில் வந்திறங்கிய ராகவனும்தான்.

''பலே. ஜரூரான வேலை'' என்றவரை மூன்றாம் மனிதரைப் போலத்தான் அவளால் பார்க்க முடிந்தது. அவரது தளர்ந்த உடலை, சோர்ந்த முகத்தைப் பார்க்க பரிதாபமாய்தான் இருந்ததே ஒழிய பரவசமாயில்லை!

அவரும் அவளது அமைதியைக் கவனித்துவிட்டார். ''மன்னிக்கணும் ஜோதிகா... அவசர வேலையாய் ஊர் கிளம்ப நேர்ந்துவிட்டது. சொந்த வேலை..''

வழக்கம் போல ஆட்டுக்குட்டியாய் துள்ளிவந்த பிரியா, ''முழுசாய், அழகாய்த்தான் இருக்கீங்க'' என்று பெருமூச்சு விட்டாள்.

''அதற்கு நான் தீபனுக்குத்தான் நன்றி சொல்லணும்.''

''ஓ! என்னை அங்கு போகக்கூடாதுன்னுட்டு நீங்கள் அங்கு தஞ்சம் புகுந்தாச்சாக்கும்?'' முள்ளாய் கேட்டாள்.

ராகவன் முன் பேச்சைத் தொடர விரும்பாமல் ஜோதிகா தன் வேலைக்குத் திரும்பினாள்.

பெண்களுக்கிடையே ஏதோ இழை தப்பிப் பிறழ்வதை உணர்ந்த ராகவன், பரிதாபமாய் நின்று பின் விலகினார்.

அவர் பிரச்சினைகளை எதிர்நோக்கும் துணிவின்றி நழுவுவது உறைத்தது, ஜோதிகாவிற்கு!

'எதற்காகத் திடீர் பயணம் என்பது பற்றியும் ஒரு வார்த்தையில்லையே? அமுக்கினிதான்!' என்று கணித்தாள்.

'தன் மகள் தீபனோடு அதிகம் பழகவேண்டாம் என்று அபிப்ராயப்படுபவர், அவளைக் கட்டுப்பாட்டில் வைக்க அறியவில்லையே, தீபனே தான் பிரியா தன்னைத் தனியா வந்து பார்க்க வேண்டாமென்று உத்தரவிட்டது?'

ராகவன் கோழையா?

ஆனால் இத்தனை விமர்சனங்களையும் அன்று மாலை தேநீர் பொழுதில் ஒதுக்கிவிட்டாள்.



கோப்பையுடன் அவள் எதிரே அமர்ந்த ராகவன் பேசினார்.

முன்பு போல அவர் மீது எவ்விதமான ஈர்ப்பு இல்லை தான். தொழிலில் அவருக்கிருந்த திறமையைத் தவிர, சக மனிதர் என்ற அபிமானம் மட்டும்தான் இப்போது எஞ்சியிருந்தது.

''பிரியா வளர்ந்தது எல்லாம் பள்ளி விடுதிகளில்தான், ஜோதிகா. வேண்டியமட்டும் பணம் அனுப்பிய நான், பாசத்தை அதிகம் காட்ட முடியவில்லை. தாயின் அரவணைப்பும் கிடைக்காததால் முரட்டுக் குதிரையாட்டம் திரிகிறாள். உன்னிடம் ஏதும் இடக்காக நடந்து கொண்டிருந்தால்...''

''பரவாயில்லை சார் பிரியாவின் தாய்... அதாவது உங்கள் மனைவி'' தயங்கிக் கேட்டவள் அவர் முகம் போன போக்கில் வாக்கியத்தை வெட்டிக்கொண்டாள் அவர் மூக்கு நுனி சற்றே சிவந்து விடைத்தது. உதடும் நடுங்கியதோ...

பேச்சு மாற்றினாள்.

''நாளை ஞாயிற்றுக்கிழமை...''

''உம்... ஆமாமா இங்கே வேலை ஏதும் நடக்காது ஜோதிகா காலை பத்திற்கு இங்கே படகு வரும். அதில் போனால் டவுன்.''

''இல்லை சார். நான் தீபன் இடத்திற்குப் போகிறேன் அழைத்திருக்கிறார்.''

''இதுவே ஒரு ஆளண்டா இடம். நீ மக்கள் கடை கண்ணிகள் இருக்கும் இடமாகப் போய் சுற்ற விரும்புவாய் என நினைத்தேன். நீயானால் 'வனவாசம்' போதுமென்று...''

''போதும் சார்'' முத்தாய்ப்பிட்டாள்.

இந்த ஊருக்கு வேலையை ஒப்புக் கொண்டு வந்தது என்னவோ ராகவன் இருக்கும் துணிவில்தான். ஆனால், இப்போது தீபன் துணை ஆறுதலாயிருக்கிறது... அது மட்டும்தானா? இன்பமாகவும் கூடத்தான்!

திங்கட்கிழமைக்கான திட்டங்களையும் போட்டுத் தந்தவள் அறைக்குப் போய் அலுப்புதீரக் குளித்தாள். வெது வெதுப்பான நீர் தொட்டிக்குள் அமிழ்ந்து கிடப்பதில் களைத்த உடல் களித்தது. தேய்த்து அலசிய கூந்தல் காய்ந் ததும் உதிரிப்பட்டாய் பறந்தாடியது. மெல்லிய இரவு உடை யின் ஊடே அவள் உடல் பால் கட்டி போன்று வழுவழுத்தது.

பெற்றோருக்கும் தமக்கைக்கும் கடிதம் எழுதினாள். ஏன் அவர்களிடமிருந்து பதிலே காணோம்? ஊருக்குப் 'போன்' மூலம் தொடர்பு கொள்ளக் கூடுமானால்... இப்படி தவித்த நேரம்... போன் மணி கிணுகிணுத்தது!

எடுத்தவள் ஆர்வமாய்க் கூவினாள் -

''அலோ... நான்தான் ஜோதிகா.''

''தீபன் பேசறேன். வேறு அதிமுக்கிய அழைப்பை எதிர் பார்த்திருந்தீர்கள் போல...'' குரலில் வழக்கமான எள்ளல்.

''ஆ... ஆமாம். இதோ ராகவனைக் கூப்பிடுகிறேன் இல்லை... பிரியாவை அழைக்கட்டுமா?'' இவளும் குத்தினாள்!

''அழைப்பு உனக்குத்தான். நாளை... நினைப்பிருக்கிற தல்லவா தேவி?''

அவன் குரலில் கரகரப்பு அவளது செவியில் தேனாய் இறங்கியது.

''உம்...''

''சீக்கிரமே வந்துவிடு தேவி... இப்போது எப்படியிருக் கிறாயோ அப்படியே வந்தால் போதும்.''



''ஐயய்யோ...'' தன்னையுமறியாமல் கூவிவிட்டாள்! இடது கை மேனியை மூடும் முயற்சியில் இறங்கியது.

''ஓ... குளியலில் இருக்கிறீர்கள் போலும் தேவி!'' குரல் நகைத்தது.

''இல்லையில்லை. குளித்தாயிற்று இரவு உடையில் இருக்கிறேன்.''

''உன் அழகை முழுக்க மறைக்காத உடையாயிருக்கும். அல்லது மூடுவது போல மூடி வெளிக்காட்டும் ஒன்றா யிருக்கும்!''

'ஆ! இவன் பெண்களைப் பற்றி எல்லாம் அறிந்தவன் தான்' என பொறுமியவள், 'இதென்ன அந்நியனுடன் அநா வசியப் பேச்சு?' என்ற பிரக்ஞை வர ''நாளை பார்ப்போம்'' பேச்சை முடித்தாள்.

''பக்கத்தில் வேறு யாரேனும் இருக்கிறார்களா?''

''உம்ம்... என் மனசாட்சிதான்'' சொல்லி தொடர்பை துண்டித்தாள்.

ஆடவன் ஒருவனை தன்னுடன் இப்படி சரசமாய் பேசவிட்டது உறுத்தியது, இன்றும் உறக்கம் வரவில்லை. இந்த அறைக்கும் நித்திரைக்கும் ராசியில்லை போலும். எழுந்து உலாத்தினாள். கீழேயுள்ள வாசிக்கும் அறையில் பெண்களுக்கான பல பத்திரிகைகளைப் பார்த்திருந்தாள். 'புரட்டலாமே' என்று தோன்ற, துவாலையொன்றை மேலே போர்த்திக் கொண்டு படி இறங்கினாள்.

இரவின் அமைதி அச்சுறுத்தினாலும் இன்னும் தீபனின் குரல் காதுகளில் ரீங்கரித்த தைரியத்தில் துணிந்து நடந்தாள். சில பத்திரிகைகளை அள்ளிக்கொண்டு வெளியேற முனைந்த போது அப்படியே திகைப்பில் உறைந்தாள்.

சில அங்குலமே திறந்திருந்த கதவின் வழியே தெரிந்த காட்சிதான் காரணம். பிரியா அரை நிஜாரும், மெல்லிய பனியனுமாய் வீட்டின் உள்ளே நுழைந்து கொண்டிருந்தாள்! எங்கே போய்விட்டுத் திரும்புகிறாள் இந்தப் பெண்?

கடிகார முட்கள் மணி பதினொன்றை என்றன! வழக்கமான புரவி நடையில்லாது பூனை அடி வைத்து நடந்த பிரியா, நெடுக நடந்து படியேறினாள். ஆசுவாசப்பட்ட பின் தொடர்ந்தாள் இவள். மறுநாள் கண்டிப்பாய் இந்தப் பெண்ணிடம் பேச வேண்டும்... இப்படியா ஊர் சுற்றுவது? தீபனைத் தவிர வேறெங்கு யாரைதேடிப் போயிருக்கக் கூடும்?

இவளை அருகே வைத்துக்கொண்டா தன்னிடம் அப்படிக் கூச்சமில்லாது பேசினான், அவன்?

வெப்ப அலை ஒன்று அடிவயிற்றிலிருந்து மேலேறி முகத்தைக் கன்ற வைத்தது.

நாளை அவன் அழைப்பை ஏற்கப் போவதில்லை! என்று முடிவெடுத்தாள். 'வந்த இடத்தில் வேலையை மட்டும் பார்த்தால் வம்பே இல்லை' தனக்குத்தானே கட்டளையிட்டுக் கொண்டு குப்புறப்படுத்துத் தூங்க முயற்சித்தாள்.

## 9



மறுநாள் காபி பரிமாறிய ரஞ்சனி இவளை விழி அகலப் பார்த்து... ''அம்மணி சினி ஸ்டார் போலாயிட்டுண்டு'' என்று பாராட்டினாள். ஜோதிகாவிற்கு மகிழ்விற்குப் பதிலாய் துக்கம்தான் தோன்றியது... ஒரமாய் ஏமாற்றம்.

ஏன்?



'வனவாசம்' போவதில்லை என்ற நேற்றிரவு எடுத்த முடிவால் தான் என்பதும் புரிந்தது. வெறும் பத்திரிகைகளை வாசித்து... முழு நாளையும் கழிக்க வேண்டியதுதான்.

''ரஞ்சனி... டவுனுக்குப் போறியா நீ இன்று?''

''சர்ச்சுக்குப் போகணும் அம்மிணி. டூரிஸ்ட் ஸ்தல மென்பதொக்கில் கடைகள் எல்லாம் ஸன்டே திறந்தோளும். அம்மிணி வருமோ?''

''சரி.''

உடம்பு கழுவி வெள்ளையில் ஊதா புள்ளியிட்ட சேலையை உடுத்தினாள். தலையை ஒற்றையாய்ப் பின்னி ஊதா மலரொன்று செருகினாள். பொருத்தமான பொட்டும் வளையல்களும் போட்டபின் கண்ணாடியில் பிரதிபலித்த அவள் உருவம் ரம்மியமாயிருந்தது.

''அம்மே... அம்மிணி!''

ஏன் இப்படி அலறுகிறாள், ரஞ்சனி? படகு வந்து விட்டதென்று துரிதப்படுத்த அழைக்கிறாளோ?

அவசரமாய் கைப்பையை எடுத்துக் கொண்டு கதவு திறந்தாள், பதறிதான் போனாள். ரஞ்சனியின் பதட்டம் அப்படிப்பட்டதாய் இருந்தது.

''பிரியம்மே ரூம்புக்கு காபி எடுத்துப் போகாம்போதே அம்மிணி அவிடயில்லா. வீடு முழுக்க நோக்கியாச்சு. ஜோசப் வெளியேயும் தேடிக் கழிச்சு அம்மிணி எவிடேயும் இல்லா... காணும்...''

''ராகவன் சார்கிட்டே சொல்லியாச்சா?''

''அவரு ஏழு மணிக்கே போட் ஏறி போயங்கிலோ?''

''எங்கே?'' ஆயாசமாய்க் கேட்டாள்.

என்ன மூடுமந்திரம் இது? சொல்லிக்கொள்ளாமல் எங்கு ஓடுகிறார், இந்த மனிதர்?

''அப்பாவோடுதான் பிரியாவும் போயிருக்கணும்.''

''இல்லயம்மிணி. கேட் கீப்பறா முரளி, சார் மட்டும் போனதாய் பரயின்னதே.''

''ஓ...!''

தலையைப் பிய்த்துக்கொள்ளலாம் போலிருந்தது.

வேலை விசயமாய் மூளையைக் கசக்கிக் கொள்வது வரவேற்கத்தக்கது.

இது..? இது அவள் பிரச்சினை அல்லவே.

ஆனால் 17 வயது குமரிப்பெண் காணவில்லை என்றால் ''போகட்டும்'' என்று சாய்ந்து மோட்டுவளையை வெறிக்க முடியுமா?

பாழாய்ப்போன தொலைபேசியாலும் பயனில்லை மறுபடி தீபனிடம் போயிருப்பாளோ? நேரில் போய்த் தான் விசாரிக்க வேண்டும்.

'வனவாசம்' போய் நின்றதும் அறைவது போல் -

'பிரியா எங்கே? அங்கே வீடே அவளைத் தேடி அல்லோலப்படுகிறது' என முடியாது. அவனது வீடு மாளிகை அல்லவே. தானே ஒரு சுற்று நோட்டமிட்டால் போகிறது.

முடிவெடுத்தவள், விடுவிடுவென நடந்தாள். காலைக் கதிரவனின் பொன் ஒளியில் வனம் ரம்மியமாய் தோன்றியது.

'நாங்களா உன்னை அன்றிரவு பயங்காட்டினோம்?' என்ற ரீதியில் அப்பாவியாய் மரங்கள் நின்றன.

பாதி வழியிலேயே தீபன் மோட்டார் வாகனத்தில் வருவது தெரிந்தது.

''ஆ! வனமோகினி மிதந்து வருகிறாள்!''



கவிதையாய் பேசி சிரித்தவனது பல்வரிசையை, புருபுருத்த கரும் மீசையின் கீழே பளீரிட்ட வெண்மையை விழியெடுக்காமல் பார்த்தாள்.

''நான் உன் அழகில் மயங்குகிறது போலவே நீயும் என் தோற்றப் பொலிவில் கருத்திழந்து போகிறாய் இல்லையா. என் சின்னஞ்சிறு தேவி?''

லேசாக எரிச்சல் தட்டியது. ஆள் கவர்ச்சியானவன் என்றாலும் பேச்சு கண்ணியமாயில்லையே. சதா ஒரு சரசச் சீண்டல்!

''நான் வந்தது தப்போன்னு படுது'' என்றாள் காரத்துடன்.

''ச்சோ... ச்சோ... இப்படித் தொட்டால் சிணுங்கியா இருப்பது நல்லதல்ல, தேவி. ஏறுங்கள் என் இயந்திரப் புரவியில்.''

அக்கனத்த இரும்பு வாகனத்தை மிக லாவகமாகத் திருப்பினான். கால்கள் மெல்லியதாய் இருப்பினும் மெல்லிய பேண்ட் வழியே அவை மிக வலிமையானவை என்பதும் தெரிந்தது.

''இல்... இல்லை நான் நடந்தே வர்றேன்.''

''அதே காரணந்தானே?'' ஒரு மழலையைக் கொஞ்சும் முகபாவனையுடன் கேட்டான்.

''எதே...? ஆம்... ஆமாம்.''

''அதாவது ஒட்டாமல், கட்டாமல், உரசாமல்..''

''போதும் எனக்கு இப்போது நடக்கப் பயமில்லை என்பதுதான் காரணம். இப்போ காலை நேரம் தானே?''

''இப்போது இரத்தம் உறிஞ்சும் அட்டை, நட்டு வாக்கிளி எல்லாம் முழுசாய் தூங்கப் போயிருக்காது. ஆனாலும்

துஷ்டரைக் கண்டால் தூரவிலகு என்ற ரீதியில் உன்னை அணுகாமல் இருக்கலாம்.''

முறைத்தாள். ''நான் துஷ்டத்தனமானவளா?''

''பின்னே இல்லையா? உன் அற்புத அழகால் எத்தனை ஆண் மனங்களை சலனப்படுத்துகிறாய். பெண்களை பொறாமையால் வேகவிடுகிறாய்!''

''சாதுர்யமான பேச்சுதான். ஆனால்...''

''உன்னிடம்தான் எடுபடமாட்டேன் என்கிறது. தேவி.''

சோகமாய் பாவனை காட்டியவனைப் பார்க்க சற்று நெகிழ்ந்தது. மனம் ராகவன் தன் விருப்பத்துக்கு வருவதும் போவதுமாய் இருக்க இவன் தனக்காய் இத்தனை மெனக்கெடுவதை மதிக்க வேண்டாமா?

'பைக்'கில் ஏறி, பட்டும்படாமல் அமர்ந்தாள். நெடிய மரங்களூடே 'சரசர' வென விரைந்தது குதூகலமாயிருந்தது. அவன் வீட்டில் போய் இறங்கி சுற்றி வந்தவளது முகம் ஒளிபெற்றது.

''ஓ!'' எத்தனை அழகான நீச்சல்குளம்! சிறியது என்றாலும் மிக இயற்கையான அமைப்பு'' பாராட்டினாள்.

''நன்றி ஆனால் இதில் சும்மா இறங்கி அளைந்து 'போஸ்' எல்லாம் தரமுடியாது. மொத்த குளமும் எட்டு அடி ஆழம். மற்றவை போல நான்கு அடியிலிருந்து பத்து அடிவரை சரிவாய்ப் போகாது.''

''நான் 'போஸ்' தரப்போவதாய் சொல்லவில்லையே?''

''பின்னே?''

''நீந்தலாம், இல்லையா?''

''எட்டடி ஆழம் என்றது கேட்கவில்லையோ?''

''நான் நீச்சல் என்றது புரியவில்லையோ?'' மடக்கினாள்.



''ஆக நீச்சல் தெரியும். பள்ளியில் நாலைந்து முறை கற்றுத் தந்திருப்பார்கள். அரைகுறை வித்தை ஆபத்து.''

''இல்லை. கிராமத்துக் கிணற்றில் கைவந்த வித்தை. நன்றாகவே தெரியும்.''

''பாவாடையை மார்புக்கு உயர்த்திக் கட்டியெல்லாம் இங்கு இறங்க முடியாது. சேலையோடு நனைந்து நீ எழுந்தால்... அடடா... இவ்வுலகையே வெல்லலாம் தேவி; ஆனால்...''

''நான் இதில் இறங்குவதாயில்லை, போதுமா?'' ஆத்திரம் மிக அறைந்து கைகூப்பினாள்.

உடனே திரும்பிவிடத் தோன்றினாலும் வந்த காரியம் முடியவில்லையே.

''பிரியாவும் உன்கூட வருவதாய் சொன்னாளே. ஏன் வரவில்லை? அல்லது நாமிருவரும் தனியாய் இருக்க வேண்டி நீ அவளைத் தவிர்த்துவிட்டாயா?'' அவன் கிண்டலை மீறி நெஞ்சம் துணுக்குற்றது. அப்படியானால் பிரியா எங்கே? கேள்வியை மீறி நெஞ்சோரம் ஒரு நிம்மதிப்பூ! பிரியா இங்கில்லை. ஒரு சிறு பெண்ணை ஏமாற்றி வயப்படுத்தும் அளவு தரம் தீபன் தாழ்ந்தவன் அல்ல என்ற நிம்மதிதான் அது!

## 10



''உங்கள் தொலைபேசியைச் சற்றுப் பயன்படுத்திக் கொள்ளலாமா?''

''ஆட்சேபணை இல்லை. சரி. உனக்கு எது பிடிக்கும் டீ அல்லது காபி.. அதாவது என்னைத் தவிர?'' கண் சிமிட்டினான்.

''காபி'' பதிலைச் சுருக்கி விட்டு எண்களை ஒற்றினாள். வெகுநேர மணியோசைக்குப் பின் ரஞ்சனியின் குரல் தயங்கலாய் ஒலித்தது.

''நான்தான் ஜோதிகா பேசறேன் ரஞ்சனி'' மேலும் குரலைத் தாழ்த்திக் கொண்டு - ''பிரியா வந்தாச்சா?'' என விசாரித்தாள். ''இங்கேயும் இல்லை... அதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன்.''

''.........''

''சரி. தைரியமாயிரு. ராகவன் எங்கு போயிருப்பார் என்பதை விசாரித்து அவருக்கு முதலில் தகவல் அனுப்ப வேணும்.''

''ஒரு நிமிசம்.'' குறுக்கிட்ட தீபன் முகத்தில் சிரிப்பில்லை.

''பிரியா இருக்குமிடம் எனக்குத் தெரியும். கவலைப் படத் தேவையில்லை என்று சொல்லிவிடலாம்.''

இவள் ஒருவாறாக பேசி ரஞ்சனியைத் தேற்றிவிட்டுத் திரும்பிய போது அவனை ஏறிடத் தயங்கினாள்.

''வேலைக்கு வந்த இடத்தில் ஒரு மாற்றமாய் இருக்கட் டுமே என்ற ரீதியில்தான் நான் உன்னை அழைத்தேன் ஜோதிகா... உளவு வேலைக்காய் அல்ல.''

காபி எடுக்கும் சாக்கில் அவன் விழிகளைத் தவிர்த்தாள்.

''பதட்டமாயிருச்சு அதான்.''

''நேரடியாய் கேட்டிருக்கலாம் 'பிரியா இங்கிருக்கிறாளா?' என்ற நேரடிக் கேள்வி எல்லாச் சிக்கல்களையும் பிரித் திருக்குமே?''

''தப்புதான். இளம்பெண்ணை வீட்டில் காணவில்லை என்பதை வெளிப்படையாய் விசாரிக்க முடிவதில்லை.''



''நல்ல எண்ணம்தான். ஆக மறப்போம் மன்னிப்போம்.''

''நன்றி. பிரியா எங்கேன்னு...''

''ராகவன் எங்கே? அவரையே தேடணும் போலிருக்கிறதே?''

''உங்களுக்குப் பாம்பு செவி.''

''தவளைகள் உரக்கக் கத்துக்கின்றனவே!''

''ஒட்டுக் கேட்பதும் தப்புத்தான் - தெரியுமா?''

''பிரியா இருக்குமிடம் எனக்குத் தெரியும்'' அலட்சியமாய் வந்தது பதில்!

''விடாக்கண்டன்... சரி சொல்லுங்க...''

''நளினாவுடைய தோழியின் வீடு தேக்கடியில்தான் இருக்கிறது. பெயர் சங்கீதம்.''

''அதாரது... நளினா?''

''தெரியாதா? பிரியாவினுடைய தாய். அவர்கள் வளர்ந்தது இங்கேயுள்ள எஸ்டேட்டுகளில்தான். படிப்பு ஏர்க்காட்டில். சங்கீதமும் நளினாவும் மிக நெருக்கம். அம்மா ஞாபகத்தில் ஒருவேளை பிரியா அங்கே அடைக்கலம் புகுந்திருப்பாள்.''

''யப்பா... வயிற்றில் பன்னீர் வார்த்துட்டீங்க. பாதுகாப் பான, பாசமான இடத்திலேதான் அவள் இருக்கிறாள்ன்னா நிம்மதி.''

''மனிதனுக்கு முழுநிம்மதி கிடைத்து விடுவதில்லை.''

''புரியலையே...?''

''சங்கீதத்திற்கு என்ஜினியரிங் படிக்கும் ஒரு மகன் உண்டு, பேர் பார்த்திபன். வயசுக்கேற்ற போக்கிரித் தனங்களும் கொஞ்சம் உண்டு. அவனிடம் பிரியாவிற்கு ஈர்ப்பு... கிறுக்கு!''

''இதென்ன புதுக் கதை - ?'' குழப்பமாய் கேட்டாள்.

''அவன் இப்போது அம்மா வீட்டில்தான் இருக்கிறானா?''

''அடிக்கடி இங்கே அதாவது 'வனவாசம்' வருவான். உன்னைப் பிரியா அழைத்து வந்து கைவிட்டு ஓடின அன்றும் கூட இங்கேதான் இருந்தான்.''

''ஓ! அவனைச் சந்திக்கத்தான் அத்தனை ஆர்வமா? காணாததில்தான் அத்தனை வெறுப்பா?'' தனக்குள் பேசிக் கொண்டாள்.

''நேற்று இரவும் கூட வெகுநேரம் இங்கே ''கிளப்''பில் இருந்தார்கள். பிரியாவும்தான்.''

''ஓகோ.... கூட அந்தம்மா.. சங்கீதமும் இருந்தார்கள் அல்லவா?''

''இருந்தார்கள்.. இப்போது திருப்திதானா?''

''பெண்களுக்கு முழுதிருப்தி வந்துவிடுவதில்லை.'' அவன் தொனியிலேயே அவள் 'கரகர'வென்ற குரலில் சொன்ன பதிலில் இருவரும் சிரித்துவிட சூழல் இலகுவாயிற்று.

''சரி உளவு வேலை முடிந்துவிட்டது. இனி உல்லாசம்...'' என்றபடி அவளை நெருங்கினான்.

இவள் சிரிப்பு உறைந்து முகம் வெளுத்ததை ரசித்துவிட்டு, ''நீந்த ஆசைப்பட்டாயல்லவா? அழைத்தபின் விருந்தோம்பலில் நான் குறை வைக்கக்கூடாதே..''

''மாற்றுடை இல்லையே... நீந்தத்-தோதாயும் உடை இல்லை.''

''உள்ளே இருக்கும். போய்ப் பார். உனக்கு சித்து உடல் வாகு என்பதால் சரியாய் இருக்கும்.''

சொல்வது போதாதென்று அளவெடுக்கிறாற்போல பார்வையால் அவளை முற்றும் அளந்தான். கூச்சத்தை



மறைக்க அவசரமாய் உள்ளறைக்குள் புகுந்து கொண்டாள். ஆண்களுக்கான அறை அது. அநாவசிய அலங்காரங்கள் அற்ற அறை என்றாலும் வெகுசுத்தமான நேர்த்தி.

புத்தகங்கள், உடை, விளையாட்டுப் பொருட்கள், வேலைக்கான கோப்புக்கள் அனைத்தும் அது அதற்கான இடங்களில் 'ஜம்' மென்று இருந்தன. சுருக்கமற்ற படுக்கை விரிப்பின் மீது வண்ணமயமான ஒரு செட் உடை கிடந்தது. முழங்கால்வரை கவ்வும் கால்சராயும். சின்ன தொரு சட்டையும்.

இதைப் போன்ற உடைகள் தானே பிரியா போடுவது? ஒருவேளை இங்கு அடிக்கடி வந்து தங்குவாளோ.. அவள் ஜலக்கிரீடை முடிந்தபின் கழற்றிவீசிய உடைகளைத் தான்... போடுவதா? இவைகளை தீபன் மடித்துப் பாதுகாப் பதும் இவளுக்குத் தருவதும்...?

அவற்றைப் போடும் மனமின்றி திரும்பியவளை தீபன் வழியிலேயே எதிர்கொண்டான்.

''இத்துணுண்டு உடையோடு என் கண்முன் எப்படி படுவது என்ற கிலேசமே வேண்டாம் தேவி. இதோ நா கிளம்பிவிட்டேன். ஒருமணி நேரம் கழித்துத் திரும்புகிறேன் சரிதானே?''

திரும்பி நடப்பவனை குழப்பத்துடன் பார்த்திருந்தாள்

'அதற்கெல்லாம் அவசியமில்லை, நான் கிளம்பியாயிற்று என்று இனி முறுக்கிக் கொண்டு கிளம்புவது எப்படி?

மனதின்றி உடை மாற்றிக் கொண்டாள். உடலுக் கச்சிதமாய் பொருந்த வேண்டுமென்றே விரியும் தன்ன கொண்ட அத்துணி அவளையும் 'சிக்' கென்று கவ்விக் கொண்ட

அது தன் ஒவ்வொரு வளைவையும் விரிவையும் அ பட்டமாய்க் காட்டியது அவனுக்குப் பிடிக்கவில்

ஆயினும் தன் உடலின் அமைப்பும் கவர்ச்சியும் பிடித்திருந்தன. துளி கர்வத்துடன் தன்னையே ஆராய்ந்து ரசித்தாள்.

சதா சுற்றியலைந்து, வேலையே கதியென்று கிடக்கும் ரகம் என்பதால் அவளிடம் வேண்டாத சதையில்லை. இடுப்பு சிறுத்து கொடிபோல் அசைந்தது. ஆனால் மேலும் கீழும் போதிய திரட்சி இருந்தது. அது கடவுள் அவளுக்கு அளித்திருந்த அழகுப் பரிசு போலும்!

முடியை உச்சியில் பந்தாய் சுருட்டி, அவன் யோசனையாய் வைத்திருந்த கண்ணாடி தொப்பியையும் போட்டுக் கொண்டாள். இனி முடி நனையாது. அகன்ற துவாலையால் தன்னை போர்த்திக் கொண்டாள். கதவைத் திறந்து வெளியே நடந்து குளத்தில் இறங்கும்வரை நெஞ்சு படபடத்தது. வேடன் அருகே எங்கோ உண்டு என்று சந்தேகிக்கும் பறவையினுடையது போல..

குளிர்நீரினுள் இறங்கியதுமே மருட்சி விலகிவிட்டது. தாய் மடி புகுந்த மழலைபோல் முங்கித் திளைத்தாள். தவளை போல கால்களை விரித்து உதைத்து குளம் முழுக்கத் துழாவினாள்.

''ஆ... ஆக நீச்சலில் பழுதில்லை'' என்ற கமெண்ட்டுடன் பார்த்து திருப்திபட்டபின்னே அங்கிருந்து நகர்ந்தான் தீபன்!

''கடவுளே... இதுவரை இங்குதான் இருந்தானா?'' வெட்கினாலும் அவள் நீரினுள் பத்திரமாய் இருப்பாளா என்பதை உறுதிப்படுத்திக்கொண்ட அந்தக் கரிசனம் பிடித்திருந்தது.

முத்தெடுப்பவள் போல அடிவரை பாய்ந்தாள். அன்னமாய் மிதந்தாள். கடிகாரம் கையில் இல்லை என்பதால் நேரத்தை மறந்தாள். விழி மூடி நீர்த்தளும்பலில் மிதந்



திருந்தபோது காலடி அரவம் கேட்டது. மின்னல் போல எம்பி தரையிலிருந்த துவாலையை எடுத்துப் போர்த்திய பிறகுதான் பார்த்தாள் - தீபன்தான்!

''இரண்டு மணி நேரமாச்சு, தெரியுமா?''

''மன்னிக்கணும். ஆனால் மிக ரசிச்சேன்.''

''நானும் ரசித்தேன். பார்த்த தரிசனம் சிலநொடி தான் என்றாலும்..''

சலனமற்று உள்ளே போய்விட்டான், அவன். இவளுக்கோ குளிர்ந்திருந்த உடலில் ஆத்திர அனல் ஏற நடத்து, உள்ளறைக்குப் போய் உடை மாற்றிக் கொண்டாள். மிதமாய் முகத்தை அலங்கரித்து ஒட்டுப் பொட்டை கண்ணாடியிலிருந்து பிய்த்து நெற்றியிலிட்டாள். முடியைப் பிரித்து விரித்தே விட்டாள்.

கதவைத் திறந்தபோது தன்னைத் தாண்டி ஒரு புயல் காற்று கடந்தது போல யாரோ ஓடினார்கள்.

''ஹாய்... ஹீரோ'' என்று தீபனைக் கட்டிக்கொண்டு தொங்கினாள் ஒரு இளம்பெண். அவனும் ''ஹாய்... வனி'' என்று அவளைத் தூக்கி ஒருமுறை சுழற்றி இறங்கினான்.

## 11



அலை ஓய்ந்து கடலில் குளித்த கதைதான் என்று தோன்றியது ஜோதிகாவிற்கு. இவன் மலர்களே தேடி வந்த தேன் தரும் வண்டு சாதி! சற்று நேரம் கூட இவனிடம் நிம்மதியாய் இருக்க முடியாது. தண்ணீரில் அலசி, கையிலிருந்த துணிகளைக் காயப்போடும் உத்தேசத்துடன் நடந்தாள்

"ஆ... யார் இந்த கதாநாயகி?" - அபார அழகு!" ஜோதிகாவைப் பார்த்ததும் கிரீச்சிட்டாள், புதியவள்.

அவள் முகம் தெரிய, ஜோதிகாவிற்குப் புன்னகைக்காமல் இருக்க முடியவில்லை!

பால்மணம் மாறா குழந்தையல்லவா இவள்!

இக்காலப் பெண்களுக்கு அபார வளர்த்தி. பீர்க்கையை முந்துமளவு! "அடடே.... என் உடையை ஏன் துவைச்சீங்க? அது அழுக்கில்லையே..."

"ஓ... உன்னதா? மன்னிக்கணும்."

"எம்பேர் வனி... வனிதா."

"மன்னிக்கனும் வனிதா. நான் குளிக்கத் தீபன் இதைத் தரவும், அணிந்துகொண்டேன். அலசியாச்சு... காய வைத்து..."

"பிரச்சினையேயில்லை. தீபன் மாமாவிற்கு வேண்டியவர்களுக்கு இதற்குக்கூடவா உரிமையில்லை? நேற்று அம்மா, அப்பா, நான் மூவரும் இங்குதான் தங்கினோம். எங்களுக்குத் தன் அறையை விட்டுக் கொடுத்துவிட்டு மாமா பாவம்... இந்த சோபாவிலேதான்... கிடந்தார்."

"ஓ... உன் பெற்றோர் எங்கே?"

"வந்திட்டே இருக்காங்க."

"வனியுடைய தாயார்தான் என் உணவு விடுதியின் நிர்வாகி. வனி தன் தந்தையோடு கோட்டயத்தில் இருக்கிறாள். அவருக்கும் அங்கேதான் வேலை. இவள் பள்ளிப் படிப்பிற்கும் வசதி" விளக்கினான், தீபன்.

"இங்கே வரும்போது நீச்சல், விளையாட்டு, பேச்சு என்று மிகக் குதூகலமாகக் கழியும்... திரும்பிப் போய் படிக்கவே பிடிக்காது."



"நன்றாய்ப் படிக்கும் பெண்ணிற்குத்தான் இச்சலுகை கள், வனி. இல்லையென்றால் சமையல்கட்டில் எலிகளோடு புரள விட்டு விடுவேன்."

"நான் கிளம்பறேன், அங்கே பிரியா வந்தாளோ இல்லையோ."

பரபரத்தாள் ஜோதிகா - இயல்பாய் இருக்க முடியவில்லை

"திருமதி சங்கீதத்திற்கு போன் போட்டு பிரியாவைக் கிளம்பச் சொல்லிவிட்டேன்."

"ரொம்ப நன்றி தீபன்." ஜோதிகாவின் தோள்க நிம்மதியில் தளர்ந்தன. "ஆமா... கரண்டியும் கையுமா நிற்கிறீர்களே... என்ன தயாராகுது? வாசனையும் பிரமாதம யிருக்கு...?"

"நெய்யில் வதக்கிய நேந்திரம் பழம், சாம்பார் கொதித்த யிற்று. தோசைக்கல் காய்ந்துவிட்டது... இதோ இப்பே தோசை வார்க்கிறேன்."

தொலைக்காட்சியில் சமையல் விற்பனர்கள் விளக்க துடன் சமைத்துக்காட்டுவது போல மாவை ஊற்றினான்.

ஜோதிகா கொடியில் உடைகளைப் பிரித்துப் போட் விட்டு, ஆவலாய் தட்டில் பரிமாறி வனிக்கு நீட்டினாள்.

"நான் சாப்பிட்டாச்சு, அத்தை."

அவள் தீபனை மாமா என்றும் தன்னை அத்தை என்ற அழைத்ததில் ஜோதிகாவுக்கு முகம் சிவந்து போனது.

மணமாய் இனித்த பழத்தை விண்டு சப்புக்கொட் சுவைத்தாள்.

சுடச்சுட விழுந்த தோசைகளிலும் அமிர்த ருசி. இ தட்டைக் கழுவும் போது வனிதாவின் பெற்றோர் நுழை தனர்.

''மாத்யூஸ் தம்பதிகள்'' அறிமுகப்படுத்தினான்.

''என்னை ரெஜி என்று அழைத்தால் போதும். நீங்கள் தானே ஜோதிகா?'' பாசத்துடன் விசாரித்தாள், திருமதி மாத்யூஸ்.

''ஆமா... எப்படி என்னைத் தெரியும்?''

''நீங்கள் வருவதாய் வெகு ஆவலுடன் காத்திருந்தாரே, தீபன்.''

''நான் சாப்பிட்டாயிற்று. உங்களுக்கு தோசை வார்க்கட்டுமா?'' சற்று கூச்சத்துடன் பேச்சைத் திசை திருப்பினாள், இவள்.

''மதிப்பிற்குரிய விருந்தாளி சமைப்பதாவது, நாங்கள் சாப்பிட்டு விட்டுத்தான் கிளம்பினோம். சற்று நேரம் பேசி விட்டுப் போகலாம் என்று இங்கே வந்தோம்.''

பேச்சில் தொடங்கிய பொழுது விளையாட்டில் முடிந்தது. சீட்டுக்கட்டுக்கள் பிடிக்கப்பட்டன.

''கழுதை ஆட்டம்தான். ஆனால் தோற்பவர் பாடவோ ஆடவோ வேண்டும்'' நிபந்தனை இட்டாள், வனி.

அத்தகு தோல்விக்கு அஞ்சி ஜோதிகா மிகக் கவனமாய் ஆடியும் கூட மூன்றாம் முறை தோல்வியைத் தொட்டாள்.

''ஆட்டமா பட்டமா?'' கறாராய் கேட்டாள், வனி.

''பா... பாட்டுதான்.''

யோசித்தால் எந்தப் பாட்டும் இரண்டடி முழுதாய் தெரிந்திருக்கவில்லை. அக்கா அடிக்கடி பாடும் ஒரு பழைய பாடல்தான் 'சட்'டென்று நினைவிற்கு வந்தது. அது அவள் சிறுமியாயிருந்த போது பள்ளி விழாவிற்காக ஆடிய பாட்டாம் -



''கங்கைக் கரை தோட்டம்

கன்னிப் பெண்கள் கூட்டம்...

கண்ணன் நடுவினிலே...''

தீபன் புல்லாங்குழல் பிடித்தது போல விரல்களால் அபிநயிக்க, சமையலறைத் துண்டால் முக்காடு இட்டுக் கொண்ட வனி கோபிகா பெண்ணாய் சுழலலானாள்.

முதலில் நடுங்கிய இவள் குரல் இத்தகு ஆர்ப்பாட்ட உற்சாகத்தில் வலுவாய் 'கணீர்' என உயர்ந்தது.

இனிமையான அந்த சோக கீதம் முடிந்தபோது மாத்யூஸ் தம்பதிகள் பலக்கக் கை தட்டினர்.

''எங்களுக்கு மொழி புரியாவிடினும் இந்தப் பாட்டின் காதல் பாவனை புரிந்தது. உங்கள் நளினமான குரல் பிடித்தது, ஜோதிகா'' என்ற பாராட்டும் வேறு.

சீட்டாட்டத்தில் வெகு நேரம் தாக்குப்பிடித்த தீபனை அனைவரும் பேசி வைத்துக் கொண்டு வெட்டி வீழ்த்த, தோற்ற அவன் ஆவலாய் ''ஆட்டம்'' என்றபடி எழுந்தான். அவன் தொடங்கிவிட்ட 'பைலா'வை மற்றவர்கள் பாடி கைதட்ட, அவன் உடல் தாளத்துடன் அசையத் தொடங்கியது. நளினமும் கம்பீரமும் இணைந்த அந்த அசைவுகளில், ஜோதிகா பிரமித்துப் போனாள். உடல் விரைவில் ஆட்டத்தில் இலயிக்க, வேகம் கூடியது. உற்சாகம் மிக எழுந்த வனியை அவன் சுழற்றிவிட அவளும் ஆட்டத்தில் இணைந்தாள்.

எதிர்பாராத கணம் ஒன்றில் ஜோதிகாவும் இழுக்கப்பட்டாள். லாவகமாய் சுழற்றிவிடப்பட்ட கைகளின் வேகம் தாளாது உடம்பும் சுற்றியது.

''ஒன்று, இரண்டு, மூன்று... தட்டு'' அவன் சொல்ல சொல்ல, மந்திரத்தால் கட்டுண்டாற் போல கால்கள்

நகர்ந்தன. தரையில் தாளத்துடன் தட்டின மாத்யூஸ் தம்பதிகளும் சேர... நேரம் நழுவியது வேகமாய்.

வியர்வையும் களிப்பும் பொங்க சோபாவில் சரிந்தவளுக்கு குளிர்பானம் நீட்டப்பட்டது.

''ஓ! நன்றி... இது எனக்குப் புதிய அனுபவம்.''

''இனிதாகவும் இருந்ததல்லவா?'' கிசுகிசுப்பாய்க் கேட்டான், தீபன்.

ஜோதிகா முறுவலித்தாள்.

உருளை வறுவலோடு பழரசம் பருகியவள் ரெஜியிடம் பேச்சுக் கொடுத்தாள்.

''கடிதங்கள் இங்கு வர ஏன் தாமதப்படுகிறது?''

''இல்லையே - தினமும் பட்டு வருகிறதே.''

''ஊரிலிருந்து எனக்குக் கடிதமே வரவல்லை... அதான்.''

''வீட்டில் 'பேசி' உண்டா?'' கேட்டான், தீபன்.

''இருக்கிறது. நான் அடிக்கடி வெளியூர் போகத் தொடங்கியபின் அப்பா ஏற்பாடு செய்துவிட்டார்.''

''அப்போ அழைத்து பேசிவிட வேண்டியதுதானே?''

தேக்கடியிலுள்ள தொலைபேசியின் ஒருவழித் தடத்தை ஜோதிகா விளக்கினாள்.

''ஓ... அப்படியொரு பிரச்சனையா - அப்படீன்னா ஜோதி... நீ இங்கேயிருந்து பேசலாமே.''

''நன்றி. நான் அதை யோசிக்கவில்லை - அதற்கான கட்டணத்தைத் தந்து...''

''ஒவ்வொரு ஞாயிறும் இங்கே வந்துவிடுவதுதான் கட்டணம்'' சிறு பையனின் விண்ணப்பம்போல ஒரு உரிமையான கெஞ்சல் இருந்தது. அவன் தொனியில்.



''அடுத்த ஞாயிறு நான் ஊருக்கே கிளம்பிவிடலாம் வேலையை விரைந்து முடித்தால்...'' என்றாள், ஜோதிகா.

''என்ன அவசரம்?''

''இடையே ஓரிருமுறை வந்து இங்கே நடக்கும் வேலையைச் சரிபார்த்துக் கொண்டால் போதும்.''

எண்களை அவனே அவளிடம் கேட்டறிந்து தட்டினான்

''என் படுக்கை அறையிலுள்ள 'பேசி'யில் பேசிக்கொள் ஜோதிகா. எங்கள் இடையூறு இல்லாதிருக்கும்.'' என்றவன் கதவையும் சாத்தி வைத்தான்.

பேசி முடித்து வெளியே வந்தவள், ''நல்லவேளை பேசினேன். என் குரல் கேட்ட அம்மா அழுதேவிட்டார்கள். எ கடிதம் கிடைக்கவே இல்லையாம். விலாசம், 'பேசி' எ எல்லாம் தந்துவிட்டேன். அதுதான் தாமதம்.''

''இருக்கட்டும். வீட்டில் எல்லாரும் சுகம்தானே?''

''உம்...'' என்றபோது ஏனோ அவன் மீது நேசம் பெருகியது

சற்றுப் பொழுதில் ஜோதிகா கிளம்பினாள்.

''நான் போய் ஜோதிகாவை விட்டுவிட்டு வருகிறேன்'' என்று கிளம்பிய ரெஜியை தீபனின் விழிகள் அடக்கின.

''சோர்ந்து தெரிகிறாள், 'பைக்'கில் போய் விட்டு வி கிறேன்.''

இம்முறை மறுக்காமல் ஜோதிகா தொற்றிக்கொள்ள 'பைக்' கிளம்பியது.

பயணத்தின்போது இருவரிடையே அதிகம் பேச்சில்லை ஆனாலும், நெருக்கமான உணர்வு.

அறைக்கு வந்த ஜோதிகா, பால் மட்டும் பருகிவிட் மாடிக்கு ஏறினாள்.

பிரியாவின் அறையில் வெளிச்சம் தெரியவே கதவைத் தட்டினாள். பதிலில்லாது போகவே திறந்து நுழைந்தாள்.

அசதியான உறக்கம் போலும்!

பிரியாவின் முடியைக் கோதி, போர்வையைப் போர்த்தி விட்டு, விளக்கு அணைக்கும்போதுதான் பார்த்தாள்... அந்த தபால் உறையை.

தான் வீட்டிற்கு எழுதிய கடிதம்!

'தபாலில் சேர்க்க நானாயிற்று...' என்று பிடுங்கிக் கொண்டு போன பிரியா மறந்திருக்கிறாள்.

'பொறுப்பற்ற பிள்ளை! இவள் பொறுப்பை நானாயிற்று என்று தான் எடுத்துக் கொண்டாலும் பதட்டம்தான்.'

விளக்கை அணைத்துவிட்டு கடிதத்துடன் வெளியேறினாள்.

## 12



அதிகாலை வேலை தொடங்கியது. எந்த மரங்களை வெட்டுவது என்று முடிவு செய்தாள். அவை மாளிகையின் அழகை மறைத்ததால் வந்த வினை அது. மண் எந்தெந்த இடங்களில் சரிவாக, எங்கெங்கு சமமாகப் பரப்பவேண்டு மென்ற ஆணையை விடுத்துவிட்டு, இடையிடையே தனக்குத் தோன்றிய கற்பனைகளையும் தாளில் குறித்துக்கொண் டாள்.

பத்து மணிபோல தேநீர் கோப்பையுடன் வந்த ராக வனின் விழிகள் சிவந்திருந்தன.

'அடடே... எப்போ வந்தார் இவர்? காய்ச்சலா?' என்று உள்ளே எழுந்த கரிசனைக் கேள்விகளைத் தட்டி அமுக்



னாள், ஜோதிகா. விருப்பம்போல வந்து பேசுவரிட
கேள்விகள் அநாவசியம்.

காலை வாழ்த்து மட்டும் கூறி தன் வேலையைத் தொடர்
வனை குற்ற உணர்வுடன் பார்த்தார்.

''ஜோ, எதிர்பாராத விதமாய் நேற்றும் கிளம்ப வேண்
தாயிற்று.''

''சரி.''

''வெகு வேகமாய் முன்னேறுகின்றன, உன் வேலைகள்

''வேலை முடிந்தால்தான் சீக்கிரம் ஊர் கிளம்பல
இல்லையா?''

''உனக்கு இங்கே பொழுது போகாதுதான் ஜோதி
தொலைக்காட்சி பெட்டிகளும் இல்லை....''

''பாதகமில்லை. எனக்குப் பிடித்தது புத்தகம்தான்.''

''இன்று ஊருக்குள் ஒரு கல்யாண வரவேற்பு உண்
அரசாங்க விடுதி மேலாளரின் மகள் திருமணம்.
களுக்குள் பல ஆண்டுப் பழக்கம். நீயும் வரலாமே இங்கு
பலரை நீயும் அறிமுகமாக்கிக் கொள்ளலாம். நாளை
வேலையைக் கண்டு பிரமிக்கும் போது உன்னை அறி
கொண்டதில் அவர்களும் மகிழ்வார்கள்.''

போகவேண்டுமென்ற ஆவல் இல்லையாயினும்,
மாலைப் பொழுது சுவையாய்க் கழிந்தால் நல்லதுதா
நேற்று தீபன் வீட்டில் சிலராய்க் கூடியிருந்தது உற்சாக
யிருந்ததே!

அவள் முகத்தின் முறுவலைக் கண்ட ராகவன், ''அப்
வருகிறாய்!'' என்றார்.

''பிரியாவைப் பார்த்தீங்களா?''

''இனித்தான். நீ இங்கிருப்பதால் எனக்கு அவளைப் பற்றிய கவலையில்லை.''

''ஆனால், அவளும் இங்கு இருப்பதில்லை! முதல்ல ரொம்பப் பயந்து போனோம். யாரோ திருமதி சங்கீதம்...''

''ரஞ்சனி சொன்னாள். பிரியாவிடமும் இது குறித்துப் பேசுகிறேன்'' நழுவினார், அவர்.

இப்பயணத்திற்கு அவள் சில புது ஆடைகள் வாங்கியிருந்தாள் - ராகவனை அசத்த வேண்டுமென்ற நோக்கில்.

அதில் ஒன்று தான் அந்த சிவப்பு ஜார்ஜெட் சேலை! ஓரமாய் வெகு சின்ன சரிகைப் புள்ளிகளைத் தவிர வேறு வேலைப்பாடுகளற்ற அச்சேலை பார்த்தவுடனேயே அவள் கருத்தைக் கொள்ளைக் கொண்டது. துணியின் நயமும், இரத்தம் போன்ற ஆழ்வண்ணமும் அதை உடனே வாங்கச் செய்தன. அதற்குப் பொருத்தமான காதணிகளையும் தேடி எடுத்தாள். மிளகாய்ப்பழம் போன்ற பருத்த கற்கள் மின்னிய காதணி.

சூரியன் உக்கிரமாயிருந்த மதியம் சற்று நேரம் படுத்து எழுந்தவள், மறுநாளுக்குரிய குறிப்புகளை மேஸ்திரியிடம் தந்துவிட்டு, திரும்பி வந்து குளித்து உடை மாற்றினாள்.

நினைத்ததற்கும் அதிகமாகவே அச்சேலை அவளுக்கு எழில் சேர்த்தது. வளைவுகளைத் தழுவியது. உடலைக் கவ்விய பட்டு இரவிக்கை அவள் நிறத்தை தகதகவென மின்னச் செய்தது. துளி மையெடுத்து விழிகளுக்குள் விரல் நுனி ஓட்டினாள். அவை ஜோடி கருப்பு வைரங்களாய் வெட்டின.

அதரங்களின் இளம் சிகப்பும், நெற்றியின் 'பளீர்' சிகப்பும் முகத்தின் சோபையைக் கூட்டின.

கூந்தலை தளர்வாய் முடிந்து, கம்மல்களையும் மாட்டினாள்.



பாதி காது மூடிய கரிய குழற்கற்றைகளை மீறி போக்கிரித்தனமாய் கண்ணடித்தன, நகைகள்.

புறப்பட்டாள்.

பிரியாவும் வந்தாள்.

''ஆ! ஏக அலங்காரந்தான்'' படகில் அருகமர்ந்திருந் பிரியா பாதி மனதாய்ப் பாராட்டினாள்.

''போவது திருமண விழா அல்லவா?''

''யாருக்கு?''

இடக்கான கேள்வி. ஜோதிகாவுக்குப் புரிந்தது. ஏதே தனக்கே திருமணம் என்பது போல் இருக்கிறதாம் அல காரம்! ''உன்னை எங்கே இரண்டு நாளாய்க் காணோம்?''

இது கேட்காதது போல திரும்பிக் கொண்டாள், பிரிய

உறுமலுடன் ஓடிய படகு கரை சேர்ந்த போது ஏதோ பு உலகம் புகுந்த பிரமை. ஆள் நடமாட்டம் கண்டு ஓ வாரமாகி விட்டதே. திபு திபு என்ற மனித கூட்டத் கடைகளை ஆவலுடன் வெறித்தாள்.

ஊரிலிருந்தபோது இப்படி விழா, வைபவங்களுக்கு போவதை அவள் அதிகம் விரும்பியதில்லை. அம்மாதா கெஞ்சுவாள் -

''வாடி... அந்த வாடாமல்லிப் பட்டுச்சேலை எடுத் வருசம் ரெண்டாச்சு. நல்லா உடுத்தி நாலு இடம் போன தானே நம்ப வீட்டிலே இப்படியொரு அம்சமான பெ இருக்கிறது ஊருக்குத் தெரியும்.''

''தண்டோரா போடுவதுதானே!''

''இத்தனை அழகிருந்து என்ன? காதில ஒரு பொட் உடம்பிலே பருத்தியுமாய் வேலை வேலைன்னு அலை வாழ்க்கைங்கறது. புத்தியைக் கசக்கி விதவிதமாய் தோட்ட

அமைக்கிறதும், பணம் சம்பாதிக்கிறதும் மட்டுமில்லையே. அக்கா குழந்தையை அள்ளி மூச்மூச்சுனு கொஞ்சற? உனக்குன்னு ஒண்ணு பிறக்க வேண்டாமா?''

அம்மா தன் எதிரே நின்று வழக்கம் போல வார்த்தைகளால் விளாசுவது போல கற்பனை செய்த போது குமிழ் குமிழாய் சிரிப்பு வெடித்தது. ''மனதிற்கும் பிடித்திருக்க வேண்டாமா, அம்மா? ஐயோ... இவன் இல்லாமல் நான் இல்லை... இல்லவே இல்லை என்று மருகி அரற்றும் ஈர்ப்பு வேண்டாமா? அவனை நம்பி என்னையே தருமளவு நம்பிக்கை வேண்டாமா? அவனுக்குள் அடங்கி இயங்குமளவு மதிப்பு. இழைந்து மிகழும் பேரின்பம் எல்லாம் அவசியமில்லையா? இதெல்லாம் இல்லையெனில் திருமணத்திற்கு என்ன அவசியம்? அதுவும் அவசரமாய்? இப்படி எல்லாம் தன் தாயிடம் சொன்னது சரிதான் என்று மனதுக்குள் மறுபடி தீர்மானம் எழுதிக்கொண்டு, திருமணக்கூடம் ஏறினாள். முன்புற தோட்டம் முழுக்க பிரமாண்ட விசிறி வாழைகள்... அலங்காரப் பாக்குமரங்கள்.

''இதென்ன தெரிகிறாதா, ஜோதிகா?''

ராகவன் காட்டிய மரம் பரிச்சயமானதாய் தெரியவில்லை. பலாப்பழம் போல தண்டிலேயே அங்கும் இங்குமாய் பச்சைக் காய்கள்... வெள்ளை மலர்கள்.

''என்னது இது?''

''கொக்கோ மரம். பழம் கனிந்தபின் இதன் விதைகளை உலரவிட்டு அரைத்தால் 'கமகம'வென்று கொக்கோ தூள்.''

''ஓகோ...'' ஆவலாய் கேட்டவள், உச்சிப் படியை கவனக் குறைவால் தவறவிட்டாள். தடுமாறியவளை ராகவன் கை தாங்கியது. அப்போதுதான் உணர்ந்தாள். இவர் ஸ்பரிசம் தகிப்பாயில்லை. குளிர்வாய்.. சற்றே வியர்வைப் பிசுபிசுப்புடன் கூடிய தொடல். எவ்வித கிளர்ச்சியுமற்ற கவனத்தைச்



சிதறடிக்காத.. அடிவயிற்றிலிருந்து உச்சிவரை புஸ்வா
மொன்றை பற்றியெரிய வைக்காத சாதாரணத் தீண்டல்.

இவள் இத்தகு யோசனைகளில் ஆழ்ந்திருக்கையில் அங்
குழுமியிருந்த அனைவர் பார்வையும் அவளில் பதிந்
வியந்தது. ஜோடியாய் அவள் முழங்கையைத் தாங்கி நின்
ராகவனையும் அவளையும் குறும்பாய் ஆராய்ந்தன. சி
பார்வைகள். சில நாவுகள் வதந்திகளைப் பின்னத் தொடங்கி

சுற்றிவந்த அவள் பார்வை தீபனை தேடியது!

அவன் கிடைத்த உவகையில் வண்டுவிழிகள் மொய்த்த

பார்வைகள் உரசிக்கொண்ட போது கிடைத்த தகிப்பு
சுகமாய் சுட்டது!

13



அங்கிருந்த பலரோடும் அறிமுகப்படலம் நடந்த
மணமக்களையும் சந்தித்து வாழ்த்தினார்கள். பேச்சி
போது தலையசைவில் அவள் கம்மல்கள் கங்குகள் போ
சுடர்விட்டன.

ஒத்த ரசனை உடையவர்கள் பலர் அங்கிருந்ததால் பே
சுவையாய் போனது. சிலர் அவளது முகவரி அட்டை
கேட்டு வாங்கிக் கொண்டனர்.

அத்தனையின் நடுவிலும் அவள் விழி தீபனுக்கா
அலைந்து தன் வலைக்குள் பிடித்துப் பின் மனதில்லா
நழுவவிட்டன. அவளுக்கே இந்த உணர்வு விசித்திரமா
பட்டது. சந்தித்த சில நாளிலேயே ஏன் இப்புதியவன் இப்
தன்னை ஈர்க்கிறான்... அலைக்கழிக்கிறான்?

மணமக்கள் 'கேக்' வெட்டி ஒருவருக்கொருவர் இனிப்பு ஊட்டியபின் வந்தவர்கள் விருந்துக்கு அழைக்கப்பட்டனர்.

பஃபே ரக விருந்து.

மேசையில் பரப்பப்பட்ட உணவு தினுசுகளில் தங்களுக்கு பிடித்தவற்றை, வேண்டிய அளவு நாமே எடுத்துக் கொள்ள வேண்டியதுதான். கூடவே 'பெப்சி' ஒன்றையும் எடுத்துக்கொண்டு, அமர தகுந்த இடம் தேடினாள்.

''வெளியே தோட்டத்தில் இத்தனை இரைச்சல் இராது. போகலாமா?'' அழைத்தது தீபன்!

''உம்ம்...''

விசிறி வாழைகளும் வண்ணமலர்களுமாய் எழில் கொஞ்சும் தோட்டம்தான்...

''உன்னை வெளியே அழைத்துப் போவதற்கு வேறு ஒரு காரணமும் உண்டு, தேவி.''

என்ன என்கிற தினுசில் அவள் தலை உயர்த்த, அவள் கம்மல்கள் சிவப்பாய் சிரித்தன. அந்தச் செவ்வொளி கன்னங்களில் படர்ந்து விழிக் கருமைக்குச் சவால்விட்டது. மெல்லியதாய்ப் பிரிந்திருந்த இதழ்களின் நடுவேயிருந்து முத்துப்பற்களின் மினுங்கல் வேறு...

விழிதட்டாமல் அவளையே உறுத்துப் பார்த்தவன்,

''நீ அதி அழகாய் இருக்கிறாய் என்பதுதான்.''

''அதனால்?''

''இங்கு அத்தனை பயல்களும் உன்னையே வெறிக்கிறான்கள். ஏன் கல்யாண மாப்பிள்ளைக்கூட அடிக்கொருமுறை உன் பக்கம் திருட்டுப் பார்வை அடிக்கிறான்.''

''சேச்சே... என்ன இப்படிக் கேலி...''



''மெய்...! மணப்பெண்ணை யாரும் கவனிக்கக் கூடாது என்று கங்கணம் கட்டிக்கொண்ட அலங்காரமா? தவிர ராகவன் கையில் கிளி போல தொற்றிக்கொண்டு வேறு வந்தாய்...''

இப்போது அவளுக்குள் 'சுறுசுறு' வென்று எரிச்சல் பரவியது. அவனைவிட்டு நகர்ந்தாள்.

வெளிச்சம் அதிகம் இல்லாத மூலை ஒன்றைத் தேர்ந்தெடுத்து அமர்ந்த பின்பும் கூட தன்னிச்சையாய் பார்வை அவனுக்காய் அலைந்தது.

'ச்சே... என்ன விசித்திர தவிப்பு, இது...!'

அவன் திருமதி. ரெஜி மாத்யூசிடம் ஏதோ தீவிரமாய் பேசிக் கொண்டிருந்தான். இவள் இருந்த திக்கைக் காட்டிப் பேசுவது போலிருக்க, அவசரமாய்க் குனிந்து முள் கரண்டியால் உணவை அளைந்தாள்.

சில நொடிகளில் ரெஜி இவள் அருகே வந்து அமர்ந்தாள். ''என்ன ஜோதிகா, நீங்கள் தனிமை விரும்பியா'' என்ற கேள்வியோடு!

''தனிமையிலிருந்தால் தொல்லையில்லை அல்லவா?''

''இனிமையும் இல்லை.''

''அது தகுந்த துணையிருந்தால்தான்... இனிமை சாத்யம்''

அரைநிமிடம் அமைதியாயிருந்த ரெஜி தலையசைத்தாள். ''உண்மைதான் மனப்பொருத்தமற்ற தம்பதிகள் வாழ்வைப் பார்க்கையில் அது வெகு உண்மை. சரி, திருமதி. நளினா ராகவன் எப்படி இருக்கிறார்களாம்!''

திடீரென்று உச்சந்தலையில் கூடைப் பனியைக் கொட்டியதுபோல விதிர்த்தது, ஜோதிகாவிற்கு.

''என்... என்ன கேட்கிறீங்க?''

''வைத்தியம் முடிந்து விட்டதாக கேள்விப்பட்டேன். ஆண்டின் பாதி மாதம் அவர்கள் மருத்துவமனையில் தான் வாசம். ராகவன் சாரும்கூட இந்த வாரம் இருமுறை அங்கு போயிருந்தாராமே? பாவம்... நளினி ஆசைப்பட்டு ராகவனை மணந்து கொண்டாள். சேர்ந்து இனிதே வாழ வாய்க்கவில்லை. பெரிய தேயிலை எஸ்டேட் முதலாளியின் ஒரே மகள்....''

ஆக ராகவன் மனைவி, இவள் நினைத்தது போல் சாமதியில் இல்லை. உயிரோடுதான் இருக்கிறாள். இவரும் அவளைப் பார்க்கத்தான் போய் வந்திருக்கிறார். யாரிடம் சொல்லிக் கொள்ளாமல் ரகசியமாய் போனது அங்குதானா?

''அவர்களுக்கு என்ன செய்கிறது? ஏன் மருத்துவமனையில் இருக்கணும்?''

''நளினி அழகும் ஆரோக்கியமுமான பெண்தான். மனதிற்குத்தான் நோய்... குமைச்சல்.''

''மனநிலை பாதிக்கப்பட்டவரா?'' குரலைத் தழைத்தாள். திகைப்பில் மூச்சும் கூட சன்னமாய் வெளிவந்தது!

ஆக இவள் அன்றொருநாள் நினைத்தது போல பைத்தியம்தான். ''நளினா! பைத்தியம் என்று முழுதும் சொல்ல முடியாது. மனநோய் மருத்துவர்கள் மன பாதிப்பு என்கிறார்கள். அது ஒரு கதை...''

''எனக்குத் தெரியலாம் என்றால் சொல்லுங்கள்.''

''அவரே அதாவது ராகவனே உன்னிடம் சொல்லியிருப்பார் என்று நினைத்தேன். இருபது ஆண்டுக்கு முன்பு திருவனந்தபுரத்தில் நடந்த அழகிப் போட்டியில் நளினாவுக்கு இரண்டாம் பரிசு கிடைத்தது. பணக்காரக் குடும்பம். பகட்டான வாழ்வு. அதுவே சிறு ஏமாற்றத்தைக் கூடத் தாங்கிக் கொள்ள முடியாத சுபாவமாக அவளில் உருவெடுத்து விட்டது.''



''புரிகிறது...''

''அழகிப் போட்டியில் முதல் பரிசு பெற்ற பெண்.. பெயர் சந்திரிகா என்று நினைக்கிறேன். அவளுக்குப் பெரு பணம், பகட்டு இல்லையென்றாலும் பழுதில்லாத பேரழகு பண்பானவளும் கூட.... என்ன ஜோதிகா, நீங்க சாப்பிடவே இல்லையே?''

''இதோ...'' ஆறிக் கொண்டிருந்த புலவை அவசரமாய் இரண்டு வாய் அள்ளிப் போட்டுக் கொண்டு, ''சொல்லுங்க என்றாள்.

''அந்த சந்திரிகாவின் வீட்டில் அவளுக்கேற்ற மாப்பிள்ளை ராய் ராகவனைப் பார்த்திருக்கிறார்கள்.''

''ஓகோ...'' இவளுக்கு விளிம்பு புலப்பட்டது.

''தன்னை அழகுப் போட்டியில் பலர் முன்னிலையில் முந்திக் கொண்டவளைத் தான் வாழ்க்கையில் பின்னுக்கு இழுத்துக் கீழே தள்ள வேண்டும் என்ற வெறி, நளினாவிற்கு நேரில் போய் ராகவனைப் பார்த்தவளுக்கு அவர் தோற் மும் பிடித்திருந்தது. இப்போது போல கண்களின் கீ கருவளையமும் சரிந்த தோளுமாய் இருக்க மாட்டார் ராகவன். தலைகொள்ளா சுருள்முடியும்கூட.''

''உம்ம்...'' வடகத்தைக் கொறித்தபடி கவனித்தாள்.

''பணக்காரத் தந்தை மூலம் பேரம் நடத்தி ராகவனை படிய வைத்து விட்டாள்.''

''இவர் வளைந்து கொடுத்திருக்க வேண்டியதில்லையே?

''பணம் பத்தும் செய்யும். அந்தப் பத்தில் இதுவும் ஒன் என வையேன்!''

''ஆனால், நளினாவின் பொறாமையும் ஆதிக்க மன பான்மையும் அவர்கள் தாம்பத்தியத்தை நாசம் செய்து விட்ட

அவள் தந்தை மூலம் பல பெரும் நிறுவனங்களின் வேலை, ராகவனைத் தேடி வந்தது. அவரும் அதில் மும்முரமானார். தொழில் முறையில் அவர் பெண்களிடம் பேசிப் பழகுவதை யும் நளினா வெறுத்தாள். செல்வ மமதையில் கணவனை ஆட்டுவித்தாள். 'ஏன் அங்கே போனாய்?', 'இவளுடன் என்ன சிரிப்பு?', 'எந்த பெட்டை நாய் உனக்கு போன் செய்தாள்' என்று உலுக்கி எடுத்ததில் அவரே உதிர்ந்து பொடியானார்!''

''சந்தேகத்தால் நாசமான உறவு... வாழ்வு...''

''இவர்களின் நடுவே இருந்தால் சின்ன இளங்குருத்து நாசமாகிப் போகுமே என்று பிரியாவின் தாத்தா - அதாவது நளினாவின் தந்தை - பேத்தியை ஏர்காட்டில் சிறந்த பள்ளி யில் சேர்த்து விட்டார். வசதியான பெற்றோர் இருந்தும் அவர்களின் பாச கவனிப்பில் வளர முடியாத துரதிருஷ்டம் அப்பெண்ணிற்கு.''

''இது பற்றியெல்லாம் ராகவன் என்னிடம் ஒரு வார்த்தை விட்டதில்லை...''

''புண்ணைக் கிளறி விடுவதில் ஆறுதல் கிடைக்காது என்று நினைத்திருப்பார்.''

இவளுக்கு சமாதானமாகவில்லை.

மகளைப் பற்றிய பொறுப்புகளை தனக்குத்தர தெரிந்த வருக்கு இதைப்பற்றி ஒரு கோடிட்டுக் காட்டத் தெரியாதா... இப்படிப் பொறுமத்தான் முடிந்தது.

திறமையிருந்த அளவிற்கு ராகவனுக்குத் துணிவு இல்லை. இல்லையென்றால் என் மகள் உன்னிடம் வருவது பிடிக்க வில்லை என்பதைத் தீபனிடம் சொல்லாமல் மூக்கைச் சுற்றித் தொடுவது போல இவளிடம் சொல்வானேன்?

திரும்பும்போது, இரவில் கருத்த ஏரியில் படகு பயணம் நூதனமாயிருந்தது. உள்ளே பொங்கிய உணர்வுகளின் கலவைகூட புதிராகவே இருந்தன.



தோட்டத்தைக் கடந்து வீட்டை ஏறிட்டபோது...

யார் இத்தனை விளக்குகளையும் தட்டி விட்டது என் யோசித்தாள்.

மிகப் பிரகாசமாய் ஒளிவெள்ளம் பிதுங்கி வழிய நின்றது மாளிகை.

'யார்... வந்திருப்பார்கள்?' ராகவனும் முணங்கினார்!

ஓடி வந்த ஜோசப் - ''சாரின்டே மாமனார் வந்திரு ன்னது'' செய்தி சொன்னான்.

முகம் வெளிறியவர், ''நீங்கள் ரெண்டு பேரும் பின்ப மாய் நடந்து மாடிக்குப் போங்க... அப்புறமாய் உன்னை அழைத்து அறிமுகப்படுத்துகிறேன் ஜோதிகா'' என்றார்.

இவள் மறுப்பேதும் சொல்லாமல் பின்புறமாய் நடக்க

''ஊகூம்... நான் தாத்தாவைப் பார்க்கணும்'' என் பிரியா ஆவலுடன் ஓடினாள்.

வெகுநேரம் பத்திரிகைகளின் துணையுடன் ஜோதி விழித்திருந்தாள்.

ஆனால், அவளுக்கு அழைப்பு ஏதும் வரவேயில்லை.

14



மறுநாள் காலை காப்பி நீட்டிய ரஞ்சனியின் முகத்தி வழக்கமான குறுநகையில்லை.

''என்ன ரஞ்சனி? வேலை அதிகமா? விருந்தாளிங்க திருக்காங்க இல்லையா? அதான்.'' - பேச்சு தந்தாள்.

''நேற்று ராவு சாரோட மாமனும் ஒன்னிரண்டு பந்துக்களும் வந்து, இப்போள் விடிஞ்சதும் அந்த அம்மேயும் வந்திறங்கி...'' ரஞ்சனியின் குரல் மிகத் தழைந்து கிசுகிசுத்தது.

''அம்மேன்னா... நளினி ராகவனா?''

''ஆங்! அரசாங்கத்திட்டேருந்து ஈயிடத்தை லீசுக்கு எடுத்த ஒரு பார்ட்னராக்கும் பெரியவர். அதாகப்பட்டு நளினாயம்மையிட அச்சன். நேற்று அவர் வந்ததிலேயிருந்து கரைச்சல்...''

''அதாவது சச்சரவுன்ற?''

''அதே. இப்போள் அம்மையும் வந்ததிலேருந்து அழுகையும் அடிதடியுந்தன்னே. பெரியவர் மதியின்னுட்டு போயி.''

''உம்... நாம நம்ப வேலையைக் கவனிப்போம் ரஞ்சனி. நம்ப தலையை ஏன் உடைச்சுக்கணும்?''

இயல்பாகப் பேச முயன்றாலும் உள்ளே நமநமத்தது. எழுந்து, குளித்து உடுத்தினாள். கருப்பில் அங்கும் இங்குமாய் வட்ட கண்ணாடிகள் பதித்த பருத்திச் சேலை, முத்துத் தோடும். உள்ளங்கழுத்தில் பொடி முத்துமாலையும் ஆபரணங்கள். குதியுயர்ந்த வெள்ளைச் செருப்பைப் போட்டுக் கொண்டு படியிறங்கியபோது, அவள் தன்னையே பார்த்துக் கொள்ள முடிந்திருந்தால் தன் அழகில்தானே சொக்கி நின்றிருப்பாள்.

ஒவ்வொரு அசைவிற்கும் 'பளிச் பளிச்' என்று கண்ணாடிகள் 'மின்மினி' ஜாலமடித்தன. தேன்நிற இடுப்புச் சரிவு கருப்பு சேலைக்கிடையே சுந்தரமாய் நெளிந்தது.

ஒரு கையில் தொப்பியும், மற்றதில் கோப்புகளுமாய் இறங்கியவளின் சிந்தனை, அன்றைக்குரிய வேலையைத் திட்டமிட்டதில் கீழே குரோதம் பொங்க தன்னையே வெறித்து நின்ற உருவத்தை அவள் கவனிக்கவில்லை.



''ஜோதிகா!'' கணீரென்று சுண்டியது அழைப்பு!

திடுக்கிட்டு நிமிர்ந்தவள், சில நொடிகளில் சுதாரித்து[illegible] கொண்டாள். இவள் பெரும் பணக்காரியாக இருக்கலா[illegible] ஆனால் தான் ஒன்றும் இவள் வேலைக்கு வைத்[illegible] ஆளில்லையே...!

ராகவன் அழைப்பை ஏற்று உடன் பணியாற்ற வந்தவ[illegible]

''ஆமாம். நீங்கள் தான் திருமதி. ராகவனா?'' இயல்பா[illegible] கேட்டாள்.

''சந்தேகமென்ன? அல்லது அந்தப் பெயரை நீ தட்டி[illegible] கொள்ளத் திட்டமா?'' கேட்டவளின் குரலிலும் வி[illegible] களிலும் ஏகக் கொடூரம்.

நம்ப முடியாமல் பார்த்தாள் ஜோதிகா.

படிகளின் கீழே ஒயிலாக நின்றவள் நல்ல உயரம், சேர[illegible] தந்த நிறம். அந்த மண்ணிற்கே உரிய கருஞ்சுருள் மு[illegible] வஞ்சகமில்லாத உடல் செழிப்பு. கவனமான அலங்கரிப்[illegible] இத்தனை வசீகரங்களையும் ஒன்றுமில்லாமல் அழித்[illegible] கொண்டிருந்தது. நளினாவின் கொடூர முக பாவம்.

''தப்பு! உங்கள் வார்த்தைகள் மட்டுமல்ல... நினைப்[illegible] தப்பு'' ஜோதிகா அழுத்தமாகச் சொன்னாள்.

''நினைப்புவரக் காரணம் என்னவென்று யோசித்தாய[illegible] ஊர் முழுக்க அந்த எண்ணத்தை விதைத்தது நீ.''

''நான்... நானா!''

''நேற்று பகட்டான சிவப்பில் அவர் கையில் தொற்[illegible] கொண்டு திருமண விழாவிற்குப் போனது அவசியமா?''

நேற்றிரவு நடந்தது அதற்குள் தேவையில்லாத கை க[illegible] முளைத்து இவளுக்கு எட்டி விட்டதா?

இவளது மலைப்பைச் சாதகமாக்கிக் கொண்டு, ''என்ன அதற்குள் நம் லீலைகள் எப்படி இவளை எட்டின என்ற அதிர்ச்சியா?'' என்று சீண்டினாள், நளினி.

''அங்கு போனது உண்மை. அதில் தப்பில்லை. அவர் கையில் தொற்ற எனக்கு எந்த ஊனமுமில்லை. படி சற்று தடுக்கி விட்டது. தடுமாறியதால் கை கொடுத்தார்.''

''பிடித்த கையை நீ விடவேயில்லை.''

''இதோ பாருங்கள் திருமதி. ராகவன்... இந்த அனர்த்த விசாரணைகளுக்கு அவசியமேயில்லை. எனக்குப் பசிக்கிறது. சாப்பிட்டுவிட்டு நான் என் வேலைகளைப் பார்க்க வேண்டும், என் வேலை இந்த வாரத்தோடு இங்கு முடிந்து விடும்...''

''அதுவரை என் காதல் கதையைத் தொடர விடு என்கிறாயா?''

''நான் சல்லாபத்தை என் வேலையுடன் கலப்பதில்லை.''

''பொய்! பெங்களூரிலும் நீங்கள் இருவரும் இணைந்து பணி புரிந்திருக்கிறீர்கள். பிறகு இங்கே...''

''ஒத்த திறமை, ரசனை அவ்வளவுதான்.''

''அடேங்கப்பா! 25 வயதில் அதென்ன அபார திறமை?''

''இந்த மாளிகையின் திறப்பு விழாவிற்கு வாருங்கள். தோட்டத்தின் அமைப்பு அழகாய் இருந்தால் பாராட்டுங்கள்.''

''உன் நடத்தை அழகாய் இல்லையென்பதுதான் என் குற்றச்சாட்டு.''

''கற்பனை... வெறும் கற்பனை...''

விலகி நடந்தவள் சாப்பாட்டு மேசை முன் அமர்ந்தாள்.



''நீங்கள் வந்திருப்பதாக ரஞ்சனி சொன்னதால்தான் நா அறையில் சாப்பிடாமல் கீழிறங்கி வந்தேன்.''

''நல்லது. இன்றே அறையைக் காலி செய்து விடு.''

''என்ன சொல்கிறீர்கள்?''

''நீ இங்கிருக்க வேண்டாம் என்று சொல்லுகிறேன்.''

''என் வேலை முடிந்ததும் நான் ஏன் இங்கிருக்க போகிறேன்?''

''ஆறு மணிக்கு வேலை முடிந்த பின் லீலைகள் நட குமே!''

''நான் மரியாதையான குடும்பத்துப் பெண்.''

''அப்போ ஏன் இப்படி விவாதிக்கிறாய்? கிளம்பு. வெளி தங்கிக் கொண்டு தினம் வேலைக்கு வா. வேலை முடிந்த கிளம்பிவிடு. பிரச்சினை தீர்ந்தது.''

மேசையிலிருந்த கரண்டிகளைக் கையாண்ட நளினாவி விரல்களில் ஏக நடுக்கம் உதடுகள் கூட ஒரு விதமா கோணின.

இதற்கு மேல் எது பேசினாலும் எப்படிச் சொன்னா இவளுக்குப் புரியப் போவதில்லை. தன்னிலை இழ ஆர்ப்பாட்டம் செய்யவும் கூடும் என்பது புரிய -

''சரி'' என்று சம்மதித்து விட்டு சாப்பிடலானா ஜோதிகா.

சாப்பிட்டு விட்டு, வேலையைத் தொடங்கியபே தான் தன் உடலுமே மெலிதாய் நடுங்குவது புரிந்த வேலையில் பிரச்சினை என்றால் சரி... இது வேண்ட வம்பு.

எந்த நேரம் நினைத்தாளோ... வேலையிலுமே பிரச்சி வந்தது!

''ஐயோ தெய்வமே! விரலு துண்டாகி போயல்லோ!''

கூக்குரலில் இவள் பதறி ஓடினாள்.

மரத்தில் கயிறு கட்டி விட்டு கோடரியால் வெட்டிக் கொண்டிருந்த தொழிலாளியின் பாதம் முழுக்க இரத்தம், பெருவிரலிருந்த இடத்தில் இப்போது விரல் இல்லை...! மொண்ணை இடத்திலிருந்து இரத்தம் பீறிட்டு அடித்தது.

''கோடரி எப்படி காலில் பட்டது?''

இவன் வெட்டுவதற்கு வாகாய் மரத்தின் மீது தன் காலைத் தூக்கி வைத்த நேரம் அடுத்தவனது கோடலி முழு வீச்சுடன் இறங்கியிருக்கிறது. இவன் வேலைக்குப் புதியவன் - அத்தனை விவரம் போதவில்லை.

எந்தப் பக்கமாய் வெட்டு விழுந்தது என்று கண்டு கணித்தவள் குனிந்து தேடலானாள். வெட்டப்பட்ட பெருவிரலை!

தேடி, நீரூற்றிக் கழுவி, ஐஸ் நிரப்பி கண்ணாடி உறையில் விரலை வைத்தாள். படகிற்குச் சொல்லிவிட்டு, கூடவே போனாள்.

இவள் சமயோசிதத்தை, முறையான நடவடிக்கைகளைப் பாராட்டிய மருத்துவர் வேண்டிய முதலுதவி செய்து, விரலைப் பறி கொடுத்தவனை உடனடியாக அருகிலிருந்த பெரிய மருத்துவமனைக்கு, மருத்துவ வாகனத்திலேயே அனுப்பினார்.

''மிகக் கவனமாய் செய்யப்பட வேண்டிய அறுவை இது மேடம். நரம்புகளும், தசைகளும் இடம் மாறாமல் முறைப்படி இணைக்கப்பட்டால்தானே அவனுக்கு விரல் மீண்டும் பயன்படும்'' என்றார், மருத்துவர்.

''நீங்களும் 'பேசி' மூலம் ஒரு வார்த்தை சொல்லி விடுங்கள், டாக்டர் பாவம், ஏழைத் தொழிலாளி.''

''கவலையே வேண்டாம். அதெல்லாம் என் பொறுப்பு.''



சற்றே நிம்மதியுடன் வெளியேறிய போதுதான் இன்னு பட்டம் தன்னை தூக்கியடிப்பதை உணர முடிந்தது.

வேறு இருவரோடு துணைக்குத் தானும் வந்திருந் மேஸ்திரி நிலைமை உணர்ந்து, ''முகமே வெளுத்து போச்சேம்மா'' என்று பேச்சுக் கொடுத்தார்.

''சே... எத்தனை இரத்தம். கலங்கிப் போயிட்டேன்.''

''மதியம் தாண்டிருச்சம்மா. சாப்பிடலாமா எலுமிச்ச சோறு, பஜ்ஜி பொட்டலம் வாங்கி வரேன்.''

''சரி.''

உணவு தொண்டைக்குள் விக்கியது. ஒரே நாளில் இ அதிர்ச்சிகளை உடலால் ஏற்று செரிக்க முடியவில்லை போலு

''ஒரு நிமிடம் மேஸ்திரி'' என்றவள், ஏரிக்கரையிலிருந் தங்கும் விடுதிக்குள் போய் தனக்கு ஒரு அறையினைப் பதி செய்து விட்டுத் திரும்பினாள்.

தீவை அடைந்து சொச்ச வேலைகளை முடித்தபி குளிக்க வேண்டும் போலிருந்தது. உடலில் இரத்தவாடை மிச்சமிருப்பது போன்ற ஒரு அருவெறுப்பு.

அறைக்கு விரைந்தவள் அதிர்ந்தாள்!

அவள் பெட்டியும் பொருட்களும் நடைபோர அநாதைக போல வராந்தாவில் கிடந்தன!

15



''ரஞ்சனி நான் உன் அறையில் முகம் கழுவிக் கொள் லாமா?''

''ஐயோ அம்மணி.. செய்யுங்க... ஞான் பரஞ்சது எதுவும் நளினியம்மை கேட்ட பாடில்லா. ஞிங்களோட பெட்டியெல்லாம் அடுக்கி வெளியிலிடச் செஞ்சு.''

''பரவாயில்லை... ஒரு காப்பி வேணும்.''

முகம், கை, காலைக் கழுவி, தலையைச் சீர் செய்து கொண்டவளிடம் சூடான காபி நீட்டப்பட்டது.

ஆங்காரத்துடன் நின்றிருந்தாள் நளினி. ஒருவாய் பருகும் முன் சூடான கேள்வியும் வந்தது!

''இன்னுமா நீ கிளம்பலை. மணி ஆறாகப் போகுதே.''

''ஆச்சு பெட்டியை அடுக்கற வேலையைக் கூட எனக்காய் செய்திட்டீங்க. நன்றி..''

''இல்லைன்னா... இங்கே கூட ஒரு மணி நேரம் லூட்டி அடிப்பியே!''

ரஞ்சனி எதிரே ரசாபாசத்தைத் தவிர்க்க வேண்டி காபியை அப்படியே வைத்துவிட்டுக் கிளம்பினாள். இனி ஒரு மிடறு உள்ளே இறங்குமா என்பதும் சந்தேகம்தான்.

வெளியே இடி பெருஞ்சத்தமாய் சிரித்தது.

''மழை வர்றதுக்குள் கிளம்பிடு.''

பல்லைக் கடித்து பொறுமை காத்தாள்.

''ஜோசப்பை படகில் பெட்டிகளை ஏற்றச் சொல்லிடு ரஞ்சனி.''

''ஜோசப் வெளியே போயிட்டுண்டு அம்மிணி. விரல் வெட்டுப்பட்ட ஆளின்டே சம்சாரத்திண்டே தகவல் தந்து... செலவுக்கும் பைசா தந்து வருமாயிட்டு.''

''நல்லது. ஒரு கை பிடி - தூக்கிடலாம்.''



...த்தளத்தில் வேலையாயிருந்த தச்சர்கள் இருவர் ஓடி வந்தனர்.

''நாங்கள் தூக்கித் தராம் அம்மிணி. எவிட சேர்க்கணும்?''

''படகிலேப்பா... நான் ஓட்டலுக்குப் போகணும்.''

ஒருவரை ஒருவர் பரிதாபமாய்ப் பார்த்துவிட்டு, ''ஓ! ஆஸ்பத்திரிக்கு போனதில் படகில் எக்ஸ்டரா ஒரு டிரிப் போனதில் டீசல் தீர்ந்தபோயி. நாளை காலை டீசல் வாங்கிவரலாம்னு டிரைவர் வீடு போயில்லோ!''

நெஞ்சை அடைத்தது, ஜோதிகாவிற்கு!

தொலைபேசியிலும் யாருடனும் தொடர்பு கொள்ள முடியாது.

இப்போது என்ன செய்வது? ராகவன் எங்கே?

அவரைக் காலையிலிருந்து காணவேயில்லையே!

முதுகெலும்பை உருவிப் போட்டுவிட்டு, ''நீ எது செய்தாலும் சரி'' என்று மனைவியின் முந்தானைக்குள் பதுங்கிக்கொண்ட மனிதர்... ச்சீ... என்று போனது.

மரியாதை நிமித்தம் தன்முன் வந்து நாலு வார்த்தை தன் மனைவியின் செயலுக்கு வருத்தமோ விளக்கமோ... ஏதோ ஒன்று. ஊகூம்!

பிரியாவும் தலைமறைவாகிவிட்டாளா, என்ன?

கேள்விகள் ஆயாசப்படுத்தின.

இனி யாரையும் எதிர்பார்த்துப் பலனில்லை.

இங்கேயே இருந்தால் நளினா நரசிம்ம அவதாரம் எடுத்துத் தன்னை கிழித்தெறிந்துவிடுவாள் - வார்த்தைகளால் கூறு போடுவாள்.

''ரஞ்சனி, ஒரு டார்ச் மட்டும் கொடு. பெட்டியை நாளை வந்து எடுத்துக்கறேன்.''

''அம்மிணி தனிச்சு எவிடே... எப்படிப் போகும்?''

''ஏரியில் நீந்த முடியுமா என்ன? தீபன் வீட்டிற்குத் தான்.''

''அது கொள்ளத் தொலைவல்லோ?''

''ஒரு மணி நேர நடை.''

''இருட்டிப்போச்சு... மழையுங் கொட்டிக் களையும்.''

''போயிடலாம்.''

''நரி... கரடி... சிறுத்தை நடமாட்டம்....''

''மனிதர் வாயில் விழுறதுக்கு அதுமேல்.''

நடக்கத் தொடங்கிவிட்டாள்.

பாலம் கடந்து ஒற்றையடிப்பாதையில் நடக்கத் தொடங்கிய பின்புதான் தன் முழு முட்டாள்தனம் உறைத்தது. மோசமான மாலை, இரவு போன்ற இருளில், 'வெளிச்சம் வேண்டுமா... இந்தா...' என்ற ரீதியில் அவ்வப்போது மின்னல்கள் மட்டும் சில நொடிகள் கண்ணைக் கூசச் செய்து மறைந்தன. இந்த நேரம் இப்பாதையில் நடக்க துணியலாமா?

''பேட்டரி'' சோர்ந்து சோகையாய் மஞ்சள் வெளிச்சம் தந்தது.

விரைந்து அடியெடுத்து வைத்தாள்.

குதியுயர்ந்த செருப்புகள் நாகுக்கில்லாத மண்பாதையில் நடக்க நாணின போலும்... சுழித்துத் தடுமாறின.

கவனம் முழுக்கத் தரையில் வைத்து நடந்தாலும் மனம் அன்று நடந்தவற்றையே எண்ணி அலைபாய்ந்தது... தாங்காமல் பொறுமியது.

'போயிடணும். இன்னும் 50 நிமிடம்தான்' தனக்குத் தானே தைரியம் சொன்னாள்.



'அப்படியா?' என எள்ளுவது போல மேகம் மழை துளிகளைச் 'சடசட' என்று அனுப்பியது. பரும் துளிக வேகம் கூடி இறங்கின.

ஐந்தாம் நிமிடம் பாதை சகதியாய் கொழகொழத்த செருப்பு சேரில் அமிழ்ந்து சிக்கியது. ஒவ்வொரு அடியையு பிரயாசைப்பட்டு பிய்த்து எடுத்து வைக்க வேண்டி தாயிற்று.

நீரில் நனைத்த குதூகலத்தில் தவளைகளும் சில பூச்சிகளு கரகரவென்று பேசத் தொடங்கின. கானகம் முழுக்க அத எதிரொலி.

தொப்பலாய் நனைந்தாயிற்று.

நீரை ஊறிஞ்சி கனத்துக்கொண்டு, காலை 'சட்சட்' என் தடுக்கிவிட்டது பருத்திச்சேலை. அதைப் பிழிந்து முட் வரை தூக்கிச் செருகினாள்.

'செருப்பைக் கழற்றிவிடலாமா?'

''நட்டுவாக்கிளி, பாம்பு அத்தனையும் அவிடே உ டம்மணி'' என்ற ரஞ்சனியின் எச்சரிப்பு நினைவிற்கு வ செருப்போடு நடையைத் தட்டுத்தடுமாறி தொடர்ந்தா

'துஷ்டரைக் கண்டால் தூரவிலகு' என்று விஷ ஜந் களும் உன்னை நெருங்காது என்ற தீபனின் சீண்டலு கூடவே நினைவில் வந்தது.

'தீபன்...' தன்னையறியாமல் அவன் பெயரை உச்ச தாள்.

அவன் பேச்சில் நூறு கேலியிருப்பினும் செயல் அவளைப் பாதித்ததில்லை. பாதுகாத்தது என்றும் கூ கொள்ளலாம்.

திருமண விழா நேரத்திலும் கூட அவன் சொல்லித் தான் ரெஜி தன்னிடம் வந்து நளினாவைப் பற்றிய பேச்சை எடுத்திருக்க வேண்டும்.

நளினா உயிரோடு இருந்தது... அவள் மனநிலை... சந்தேகம் இதுபற்றியெல்லாம் அறிந்தது ஒரு கவசம் தான். இல்லையெனில் பாதிப்பு இதைவிட அதிக நோவாயிருந் திருக்கும்.

தீபனது கைக்குள் தஞ்சமடைந்துவிட்டால் போதும். நூறு நளினாக்களை எதிர்கொள்ளலாம். ஆயிரம் ராகவன் களை துச்சம் செய்யலாம்... ஏனோ மனம் இப்படி நினைத்தது. அந்த நினைப்பு தெம்பும் தந்தது.

'இன்னும் 40 நிமிட நடைதான்' தேற்றிக்கொள்ள முனைந்தபோது செருப்பு வழுக்கி வலதுகால் பிசகியது. வலி தாங்கவில்லை. கிரீச்சிட்டவள் கீழே சரிந்தாள்.

மழை வலுத்தது. சாட்டையால் அடிப்பது போல அவள் முதுகில் 'சடசட'வென்று விளாறியது.

கைகளுக்கு இடையே ஏதோ 'வழுவழு' வென்று ஊறுவதை உணர்ந்து மீண்டும் அலறியவள் உதறி எழுந்தாள்.

'நான் இருபது நிமிடம் எரிந்ததே அதிகம்' என்பது போல உயிரைவிட தயாராயிருந்தது, டார்ச்.

''கடவுளே...'' அரற்றலுடன் ஒரு அடி வைத்தாள்.

வலி 'விர்'ரென்று சீறியது.

''தீபன்...'' அலறிய அழைப்புக்கு.

பதில் அளிப்பது போல சில உறுமல்கள் கேட்டன!

அருகாமையில் ஏதோ குகை இருப்பதாகவும் மழைப் பொழுதுகளில் மிருகங்கள் அங்கு புகல் தேடி அடைவதாயும் ஒரு முறை தீபன் குறிப்பிட்டதாய் நினைவு! குகை எங்கே... சமீபத்திலா... அல்லது தொலைவிலா?



தீபன்.''

இவள் தீன அழைப்பிற்கு எதிரொலி போல எழுந்த உறுமல்கள்... அருகிருந்துதான் வருவது போலத் தோன்ற... அவளுடைய சப்தநாடியும் பீதியில் ஒடுங்கியது.

விழிகளை இறுகி மூடி சரிந்தவள் ''தீபன்... தீபன்...'' என்ற அரற்றலை மட்டும் விடவில்லை!

16



முகத்தைச் சூடாய் சொர சொரவென்று வருடுவது யார்... எது? புலியின் நாக்கோ? உடல் சிலிர்த்தது.

''தீபன்... சீக்கிரம் வாங்களேன்'' புலம்பினாள்.

''வந்திட்டேனே, தேவி. விட்டுவிலகாமல் உங்கிட்டே இருக்கேன். கண்திறந்து பாரேன். நம்ம வீட்டிற்கு வந்தாச்சு.

உடலோடு ஒட்டிக் கொண்ட ஈரச்சேலை உருவப் படுவது உணர்ந்து மானத்தைப் பாதுகாக்க அவள் கைகள் இறுகின.

''ஈரத்தை மாத்திடலாம், தேவி அதுவரை இந்தக் கம் பளியைப் போர்த்திக்கோ. யாரும் இல்லை.''

குழந்தையிடம் பேசும் பாவனையுடன் தன் குரல் தேற்றியது, சேலை உருவப்பட்டபோது வலது பாதம் அசைந்து நொந்தது.

''எங்காலு... காலை புலி கடிச்சிருச்சு'' உளறினாள்.

''துஷ்டரையெல்லாம் புலி அணுகாது'' அவளது குளிர்ந்த நெற்றிப்பொட்டில் சூடான அவன் உதடுகள் முணுமுணு

புடன் பதிந்தன. பின் அங்கு தைலம் இதமாய் தடவப் பட்டது. உள்ளங்கால்களிலும் சூடு பறக்கும் வரை. வலது பாதத்தில் வெகு மிருதுவாக.

யார் யாரோ நடக்கும், போகும் அரவங்கள் கேட்ட வண்ணமிருந்தன. தலைக்குள் குடையும் தொலைபேசியின் கிணுகிணுப்பு.

'போ. போ. ஓடிவிடு' என்று நளினா இவளைத் துரத்திய படி ஓடி வர, இவள் திரும்பிப் பார்க்கிறாள்.

சிறுத்தையின் வேகத்துடன் ஓடிவரும் நளினாவின் முக மும் சிறுத்தையின் ஜாடையில் இருக்கிறது. குத்தீட்டிகளாய் மீசை ரோமங்கள் விரைந்து நிற்க கோரைப் பற்களைக் காட்டி மிரட்டுகிறாள்.

''ஐயோ... தீபன் எங்கேயிருக்கீங்க...''

வலது பாதம் இறுகக் கட்டப்பட்டு இருக்கிறது. இப்போது வலி இல்லை. இடக்கையில் 'சுருக்' கென்று எதுவோ மருந்து வாடையுடன் உள்ளிறங்க ''நத்துவாக்கிளி கடிக்குது...'' குமுறுகிறாள்.

சூடான பானம் உள்ளிறங்குவதை உணரமுடிகின்றது விழிகளைத்தான் திறக்க முடியவில்லை. கோந்திட்டு பூசி யவை போல அவற்றை பிரிக்க முடியாத அவதி.

''தூங்கு... முதல்ல நல்லா தூங்கணும்'' பரிவாய் நெற்றி நீவப்பட, உள்ளே பொங்கிய சஞ்சலங்கள் அமர்கின்றன. மனதின் குழப்பப் படங்கள் வெளிறி மறைகின்றன. காய்ச் சலில் துவளும் மழலையைப் போல முனகலூடே உறங்கிப் போனாள்.

இடையிடையே நினைவு நெருங்கும்போது குரல்களின் ஊடுருவல். ''நளினா மனநலம் பாதிக்கப்பட்டவள் என் றாலும் இது அதிகம்தான், போக்கிடமற்ற பெண்ணை



இருட்டியபின் காட்டுக்குள் விரட்டி விடுவது கயமை!'' யாரோ பேசினார்கள்.

''பிரியாவும் கூட... அம்மாவிற்காக ஏங்கிய அந்த பெண் குழந்தை கூட - தாயின் பேச்சும் நடத்தையும் பிடிக்காமல் தன் தாத்தாவுடன் கிளம்பிப் போய்விட்டாளாமே?''

''வளரும் வயதில் மன அமைதி முக்கியம். பிரியா தாத்தாவுடன் தங்கிப் படிப்பை நல்லபடி முடிக்கட்டும். பிறகு பார்த்தியைக் கல்யாணம் செய்து கொள்ளலாம். அவன் பிரியாவிற்குத்தான் என்று வாக்குக் கொடுத்து விட் டாள், சங்கீதம்.''

''ராகவனுக்கு சொல்லிட்டாச்சு. ஆனால், ஆளைக் காணோம். நளினாவின் கோபத்திற்கு அஞ்சி பதுங்கிக் கிடக்கிறார் மனுசன். மேஸ்திரி வந்து விசாரிச்சுட்டுப் போனார்.''

''அம்மிணி கண்ணு விழிக்கட்டே! சதா சிரிப்பும் பேச்சு மாவிட்டு சுற்றித் திரியும் ஞங்களை இப்படிக் காணா எனிக்கு வையாம்.''

''ஆண்ட்டிக்கு ஒண்ணும் ஆகாது, ஹீரோ. பட்டினி கிடக் காமல் இந்த ஆர்லிக்ஸ், டோஸ்ட் மட்டுமாவது சாப் பிடுங்க.''

''எத்தனை பெரிய ஆபத்தாய் மாறியிருக்கக் கூடும் வனி. இது? எண்ண எண்ண எனக்குத் தாங்கவில்லை. வெளிநாட் டிலிருந்து இங்கு வரும் ஒரு குழுவிற்காக ஒரு நாள் டவுனில் அறை பதிவு செய்யப் போன போது - செல்வி ஜோதிகா கூட இன்று பதிவு செய்து இருக்கிறார்கள்'' என்று நிர்வாகி சொல்லியிராவிட்டால்! நான் ''பேசி''யில் அழைத்தபோது நளினாதான் எடுத்திருக்க வேண்டும். பேசாமல் தொடர்பை அறுத்து விட்டாள். அதற்குப்பின் தாங்காமல் ஓடினதால் தான்... தேவி பிழைத்தது!''

இறுதியில் கண்களைத் திறந்த போது சுற்றிலும் எத்தனை முகங்கள் அத்தனையிலும் எத்தனை மகிழ்வு.

''என்ன?''

''முழிச்சாச்சு பேசியாச்சு. யப்பா! முழுசா ரெண்டு இராப் பகல் மயங்கிக் கிடந்தே ஜோதிகா. இனியும் பொறுக்க முடியாதுன்னு உன்னைப் பெரிய மருத்துவமனையில் சேர்க்க தீபன் ஆம்புலன்சைக் கூட வரவழைச்சுட்டார்'' ரெஜி படபடவென்று பொரிந்தாள்.

''எனக்கு ஒண்ணுமில்லை. கொஞ்சம் பயந்திட்டேன்.''

''ஆமாம்மா ரொம்ப கொஞ்சம்! நாங்களும் கொஞ்சமே கொஞ்சம் அரண்டிட்டோம்!''

''வேலை... வேலை என்னாச்சு? ரெண்டு நாள் கழிஞ்சிருச் சுன்னு சொல்றீங்க. போய்ப் பார்க்கணுமே.'' ஜோதிகா எழுந்து அமர்ந்தாள்.

''அது சரி படுத்திருந்த வரை ''தீபன் தீபன்''ன்னே. இப்ப வேலையா?''

ரெஜியின் கேலியில் முகம் சிவந்து கவிழ்ந்தாள்.

''தெரியாமல் ஏதோ... பேசியிருக்கிறேன். இந்த வாரம் முடிவதற்குள் வேலை ஓரளவாவது முடிந்தால் தான்...''

''முதல்ல எழுந்து நடக்க முடிகிறதா பார், தேவி முடிகிற தென்றால் உடம்பு கழுவிக்கொள். சுடுநீர ஊற்றிக்கொண் டால் உடம்பு கலகலப்பாகும். முதல்ல இந்தப் பழச்சாறு குடி.''

தீபன் நீட்டியதை ஆவலுடன் பருகினாள்.

எழுந்து நடந்த போது எங்கும் பிரமாத வலியில்லை. அசந்து படுத்துக் கிடந்ததால் உடல் தடுமாறியது. மன வலிமையைக் கொண்டு உடல் தளர்வை அடக்கி வென்



றாள். சிறு விந்தலுடன் குளித்து சாப்பிட்டபின் எதை சமாளித்துவிடலாம் போன்ற தெம்பு வந்துவிட்டது.

''வேலை எந்த நிலையில்...'' இழுத்தாள்.

''செய்வன திருந்தச் செய். ஆக உடனே நீ உன் மேலி நிற்குப் போய் பார்வையிட்டு உத்தரவுகளை பிறப்பித்த வேண்டும்... அப்படித்தானே?''

''தயவு செய்து...''

''எனக்கும் தாங்கள் உத்தரவே இடலாம்'' புன்னை தீபனை அன்றுதான் முதன் முதலாய்ப் பார்ப்பது பே ஊன்றிப் பார்த்தாள் ஜோதிகா. புரியாத பரவசம் ஒ அவளுள் படர்ந்தது.

''வேலை இடத்திற்கு சிறு கோல் ஒன்றை ஊன்றி வ வளைப் பார்த்த மேஸ்திரி, வேலையாட்கள் அனைவருக் உற்சாகம்தான்.

''எப்படி இருக்கீங்கம்மா?''

''அம்மிணி சுகந்தானே?''

மெய்யான பிரிய விசாரிப்புகள்.

''மருது எப்படியிருக்கான்? விரல் பொருத்தப்பட் விட்டதா?'' இவளும் விசாரித்தாள்.

''ஆமாம்மா. நீங்கள் விரலைத் தேடிக் கழு போகலைன்னா இது சாத்தியமில்லை. தொழிலாளி நலனி இத்தனை அக்கறை எடுத்துக் கொண்டதைப் பார்த் நாங்களுமே கூடவேலையாட்களைப் போட்டு வேலை விரைவாய் முடிச்சிருக்கோம். பாருங்க.''

சுற்றிலும் பார்வையிட்டவளின் முகத்தில் வியப்பா மகிழ்வு. ''மெய்தான். வேலை அதி விரைவாக நடந்தி கிறது.''

''மனசுக்கு ரொம்ப கஷ்டமாய் போச்சும்மா. ராகவன் ஐயா... அம்மா உங்களை அநாவசியமா மிரட்டி, துன்புறுத்தி...''

''நம்ப வேலையை மட்டும் பார்ப்போம், மேஸ்திரி. இனி தோட்டத்திற்கு எங்கெங்கே எவ்வளவு வெளிச்சம் போட வேண்டும் என்பதைப் பார்ப்போம்.''

நடந்தபடி தன் மனக்கண்களில் வெவ்வேறு முறையான வெளிச்ச உத்திகளைக் கற்பனை செய்து பின் முடிவெடுத்தாள்.

முடிவுகளை வரைபடத்தில் குறித்து மேஸ்திரிக்கு விளக்கியவள், இதற்குத் தோதாக வேலை எப்படி நடக்க வேண்டும் என்பதையும் விளக்கினாள்.

''இவ்வளவு போதும்மா மீதியை தீபன் ஐயா கவனிச்சுக்குவார்.''

''அவர் எதுக்கு... எப்படி... ஏன்?''

''நேற்றும் கூட வந்து வேலை நடக்குதான்னு பார்த்துட்டு ஜரூர் படுத்திட்டு, உங்கள் பெட்டிகளை எடுத்துப் போனாரேம்மா.''

''ஓ... சரி. கிளம்பட்டுமா?''

பெருமிதமாய் இருந்தது. எத்தனை பிரியமும் பொறுப்புமான ஆண்; இவன்.. ஊகூம்... இவர்!

மேலே நினைவுச் சங்கிலி மீளும் முன் அதில் வெட்டு விழுந்தது. ''என்னவோ... நீ சாகக் கிடப்பது போல பேசினார்கள்? ஆள் வேலைக்கே வந்தாயிற்று போல?''

மஞ்சள் நிற சல்வாரில் நின்ற நளினாவைப் பார்த்ததும் ஜோதிகாவுக்கு மீண்டும் சிறுத்தையின் நினைவு வந்தது.

பேசாமல் பாலம் ஏறினாள்.



''என்ன பேச்சையே காணும்?'' நளினா வம்புக்கு இழுத்தாள்.

''பேசினால் உனக்குப் புரியுமா? அத்தனை புத்தி உண்டா உனக்கு?'' சிறி வந்தன சொற்கள், பாலத்தின் மறுபக்கத்திலிருந்து.

புலியின் குரூரம் கொண்ட நளினாவின் முகம் மறுகணம் மாறியது... பூனை போல... அதுவும் வெறி நாயின் முன் பதுங்கும் பூனை போல!

## 17



''என்ன உன் குற்றச்சாட்டு, நளினா? ஜோதிகா உன் கணவனைத் தன் கைக்குள் போட்டுக் கொள்வாள் என்பது தானே? நெய் சோற்றை விட்டு விட்டு யாரேனும் புளித்த பழஞ்சோற்றுக்கு ஆசைப்படுவார்களா? ஜோதிகா என்னை மணந்து கொள்ளேன்'' என்று நான் அவளைக் கண்ட கணப் முதல் தவமிருக்க, அவள் தன்னைவிட 20 வயது மூத்த, ஏற் கனவே மணமுடித்து மணமுடைந்த, 17 வயது பெண்ணின் தகப்பனை எண்ணி மருகுகிறாளாக்கும்?''

இரு பெண்களின் இரு ஜோடி விழிகளிலும் மகாவியப்பு ''அழகு, அந்தஸ்து, பணம், இளமை... எல்லாவற்றிலும் நான் எங்கே என்பது உனக்குத் தெரியும். உன் கணவன் எனக்கு உறை போடக் காணுவானோ?''

ஆத்திரத்தில் விழிகள் சிவக்க, இதையெல்லாம் கேட்ட தீபனின் உதடுகள் ஏளனமாய் மடிந்தன. ''நீ யாரையோ ஏய்த்து ராகவனைக் கைப்பிடித்தாய்... அதே போல எல்லாரும் அலைவதாய் கற்பனை செய்யாதே. புரிந்ததா?

உனக்கு நல்ல மனசு, நேர்மையான புத்திதான் அவசியம்! கணவனை சந்தேகித்து குதறுவதால் அவன் உன்னை நேசித்துவிடுவானா? முட்டாள்! நேசத்தைத் தந்து அதைப் பெறு. நீ ஜோதிகாவிற்கு செய்த கொடுமைக்கு உன்னைக் குறைந்தது சில நாளாவது சிறையில் அடைக்கக்கூடிய செல்வாக்கு எனக்குண்டு. தெரியுமில்லையா?''

நளினாவின் முகம் காகிதமாய் வெளுத்தது.

''போய் 'கடவுளே! நல்ல புத்தி தாரும்' என வேண்டு. மகளுக்கு நல்ல தாயாய் இரு. கணவனுக்கு ஆதரவாய் நில். இந்த கிறுக்குத் தனங்களுக்கெல்லாம் இன்றோடு முழு முற்றுப்புள்ளி வை.''

அவன் உறுமலுக்கு முன் தாக்குப்பிடிக்க முடியாமல் ஓடினாள், நளினா. அவள் கண்கள் கலங்கினவோ?

ஜோதிகாவிற்கு நம்ப முடியவில்லை. ஒரு வேளை இதுவும் ஒரு மயக்கக் கனவோ? கிள்ளிப் பார்த்துக் கொண்டாள்!

''என்ன... எப்படி இது? எல்லாரும் அம்மிணி, மேடம் என்பவர்களை ஒருமையில் விளித்து இந்த வாங்கு வாங்கி விட்டீர்கள்?'' கேட்டே விட்டாள்.

''இதெல்லாம் பால பாடம், சின்னஞ்சிறு தேவி.''

''எது?''

''பணமிருப்பவன் திமிருவான். ஆனால், தன்னைவிட பெரும் பணமுடையவனிடம் அடங்கித்தான் நிற்பான்.''

''புரியவில்லை... குத்தகைக்கு ஒரு விடுதியை எடுத்து நடத்துபவர் நீங்கள்.''

''சரிதான். ஆனால் என் சொத்தின் முன் அவளுடையது வெறும் கொசுறு. இதுவரை உன்னிடம் சொல்லும் சந்தர்ப்பம் வரவில்லை. சக்கரவர்த்தி ஓட்டல்களைப் பற்றி...''



''கேள்விப்படாதவர்கள் யார்? தென்னிந்தியாவின் நகரங்களில் உள்ள நட்சத்திர ஓட்டல் அது.''

''சரி. நான் தீபன் சக்கரவர்த்தி. சக்கரவர்த்திக் குடும்பத்தின் கடைக்குட்டி.''

அவனது வழக்கமான வேடிக்கைப் பேச்சோ இது எ ஜோதிகா குழம்பினாள். தவிர பெங்களூரில் அவள் ப புரிந்ததும் கூட இவர்களின் நிறுவனத்திற்கான வே ஒன்றில் தானே!

''அண்ணன்மார் மூவரும் நிறுவனத்தை நன்கு நிர்வ கிறார்கள், நானும் முழுமூச்சாய்க் குடும்பத் தொழி ஈடுபடுவதற்கு முன் சொந்தக் காலில் நிற்கும், உழைக்கு சாதிக்கும் இனிப்பை சுவைக்க ஆசைப்பட்டேன். அ விளைவுதான் 'வனவாசம்.' இது என்னை நாளை ராஜாவ இருக்க தயார்படுத்தும், முறைப்படுத்தும் என்பது எ நம்பிக்கை.''

எவ்வளவோ முயன்றும் கூட ஜோதிகாவிற்குப் செழும்பவில்லை. நெஞ்சு அடைத்தது. துக்கமாய் இருந்த

சற்று முன்... இவர் தன்னை நேசிக்கிறாரோ... அல் நேசிப்பாரோ என்று எண்ணத் துணிந்த நெஞ்சிற்கு நல்ல என்று தோன்றியது. சக்கரவர்த்தி குடும்ப வாரிசு நடுத் வர்க்கப் பெண் ஒருத்தி மீது மையல் கொள்வதாவது கொண்டாலும் வாழ்க்கைத் துணையாக வகிப்பதாவது!

ஜோதிகாவின் அப்பா ஓய்வு பெற்றாகி விட்ட இதுநாள் வரை உழைத்து சேமித்ததில் ஒரு மனையும் நகைகளும் தான் குடும்பம் கண்டது. தன் திருமண நடக்கும் முன் எப்படியாவது பெற்றோருக்கு அந்த நிலத் ஒரு சிறு வீட்டை எழுப்பித் தந்துவிட வேண்டும் எ எண்ணம் இவளுக்கு. சில சில ஆயிரங்களாய் சேர்த்

கொண்டிருக்கிறாள். பலப்பல கோடிகளுடன் புரள்பவனுடன் சம்பந்தம்? கனவில் கூட முடியாதே!

'விரலுக்குத்தக்க வீக்கம்தான் தரும்' என்று இவளது உறவும் 'பணம் பணத்தோடு சேர்ந்தால்தான். மதிப்பு' என்று அவன் வீடும் சொல்லாதோ?

அதற்கெல்லாம் முதல் கட்டம் அவன் அவளை நேசிக்கிறானா... தெரியவில்லை.

அன்பும் கரிசனையும் காதலாகிவிடுமா?

காதல் கசிந்து உருகுமாமே?

தீபன் தனக்காய் எத்தனையோ செய்யவில்லையா? இதோ இப்போது நளினாவை வார்த்தைகளால் விளாசினது உட்பட... அவன் பேச்சையும், அது கேட்ட நளினாவின் முகப் போக்கையும் இனி என்று நினைத்துக் கொண்டாலும் சிரிப்பு வரும்.

அதேபோல இவன் பெரும் பணக்காரன் என்று உணர்த்தப்பட்ட இந்நேரமும் மறக்காது. திரண்டுவந்த நாழி தாழி சிதறிவிட்டதே!

விழிகள் கலங்கிப் பொங்கி நின்றன.

கன்னங்களில் நீர் வடியாதிருக்கப் பெரும்பாடு பட வேண்டியது இருந்தது. பைக்கில் இவனுடைய பயணம் அமைதியாகத் தொடர்ந்தது.

''என்ன தேவி... பேச்சே இல்லை?''

''பால பாடம் சொல்லித் தந்துவிட்டீர்களே.''

''காதல் பாடமா?''

சீறும் காற்றில் காது கேளாதவன் போல சீண்டினான். ''இல்லையில்லை. பெரும் பணமிருப்பவன் முன் பிறர் கைகட்டி



நிற்கவேண்டுமென்ற அடிப்படைப் பாடம். நளினா
அடங்கினால் நான் எம்மட்டு?''

''குணத்தின் முன் பணம் நிற்குமா, தேவி? நளினா த
செய்தவள்? ஆக தழைந்து போகவேண்டிய நிர்பந்தம்.''

''நானும் தவறு செய்யத்தான் இருந்தேன் - கோடீசு
குமாரன் என்பதறியாமல் உங்களை என்னுடையவரா
கொண்டாடும் தவறை'' தனக்குள் மறுகினாள், ஜோதி

வீடு வந்து இறங்கியவளுக்கு மறுகணமே மனக் கி
சங்கள் கரைந்து போயின.

தீபன் வீட்டு வாசலில் நின்ற அவளுடைய பெற்றோர
பார்த்ததும்!

## 18



இரவு உணவு ஆனபின் தீபனின் அறையிலே
மூவரும் படுத்துக் குடும்பக்கதைகள் அத்தனையும் பேசி

இவளது பெற்றோர்கள் தீபனின் நல்ல குணமும் மன
பற்றி மாறிமாறி ஒரே போற்றல்தான். ''சாகப் பிழை
கிடக்கறியாம்னு அந்தத் தம்பி சொன்னதைக் கே
அலறியடிச்சு வந்தோம், நீ என்னன்னா வேலைன்னு அ
சிட்டு வர்ரே...''

''மெய்யாவே நிலைமை மோசமா இருந்துச்சம்மா. தீ
இல்லைன்னா... இப்போ நாம இப்படி நிம்மதிய
பேசிட்டு இருக்க முடியாது. பணமிருந்தும் எளிய மனித

ஆமோதிப்பு போல அந்நேரம் ''பேசி'' மணி அடித்த

''எடுக்கறியா ஜோதிம்மா?''

''அவருக்காகத்தான் இருக்கும், கூடத்திலேயும் இதே தொடர்பு உண்டு.''

''தம்பி வீட்டிலே இல்லைப் போலியே?''

இவள் தயங்கி போனை எடுத்த அதே கணம் கூடத்தில் தீபனும் தொலைபேசியை எடுத்திருக்க வேண்டும்.

''அலோ'' அவன் குரல் பேசியதும் இவள் தொடர்பை துண்டிக்கத்தான் போனாள். அதற்குள் மறுபக்கம் ஒரு பெண் குரல் கீச்சிட்டது.

''ஏய் அத்தான்? என்ன இங்கே ஏதேதோ கேள்விப் படறோமே? உன் அத்தை மகள் நான் இருப்பதை மறந்திட்டியா?''

தீபன் குரல் உல்லாசமாய் விசாரித்தது. ''என்ன கேள்விப் பட்டாய் என் அத்தை மகள் ரத்தினமே?''

''யாரோ ஜோதிகாவாம்... அவளை நீ 'காதல்' பண்றியாமே?''

போனின் கருப்பு வழவழப்பை இறுகப் பற்றின இவள் விரல்கள்.

''ஆமாம். அதுக்கென்ன?''

''கல்யாணம் செய்துக்கிற உத்தேசமுண்டா?''

''சேச்சே... அதெல்லாம் உன்னைத்தான், ரத்னா.''

''அ... அதானே பார்த்தேன். கோடியும் கோடியும் தான் ஜோடி சேரணும், அத்தான். அப்படியே அவள் வேணுமென்றால் என்னை மணந்தபிறகு அந்தப்புரநாயகி அல்லது பள்ளியறைப் பாவையாக வைத்துக் கொள்... போதும்.''

''அதற்கு அவள் சம்மதிக்கவும் தயார்தான் என்று வையேன்.''



...ரிசீவரைக் கன்னத்தோடு பிடித்திருந்து போன்ற ...அருவெறுப்பில் தொலைபேசியை விலக்கி, மிக மெள்ள ...தொடர்பைத் துண்டித்தாள்.

ஆக இவனுக்கும் சகல பணக்கார வக்கிரங்கள் உண்டு. இவளை உருக்கி படுக்கையறைக்குத் தயார் படுத்துவதற்குத்தான் இத்தனை நாடகமும். கடவுளே! இவளும் உருகிய மெழுகின் நிலையில்தான் கிடந்தாள்!

மீண்டும் தலை பாரமானது.

கண்கள் நீர் சொரிந்தன.

'சுளீர்' என்று உடலெங்கும் ஒரு வலி.

படுத்துக்கொண்டாள்.

''ராகவன் ராகவன்ம்பியே... இத்தனை நடந்திருக்கு. உன்னை ஒரு எட்டு வந்து பார்க்கலை, பார்த்தியா அந்த மனுசன்?'' அங்கலாய்த்தாள், அம்மா.

''அவ்வளவுதாம்மா உலகம்'' - அத்தனை உணர்ந்து அவள் எந்த வார்த்தையாகிலும் இதுவரை சொன்னதுண்டா என்பது சந்தேகம்தான்.

''ஏதோ இனியாவது அந்த நளினா பெண்ணிற்கு புத்தி நேராகி நல்லபடி குடும்பம் அமைஞ்சதுன்னா சரிதான்.''

''உம்ம்... கண்ணை அசத்துதும்மா.''

''எங்களுக்குந்தான். தம்பி தகவல் சொன்ன நிமிசத்திலேருந்து அழுகைதான். பிரயாண அலுப்பு வேறு...'' என்ற அம்மா புரண்டு படுத்த ஐந்தாம் நிமிடம் அவளது சுவாசம் சீரானது.

அப்பாவின் குறட்டையும் சற்று நேரத்தில் சுருதி சேர்க்க இவள் புரண்டு தவித்தாள்.

நெஞ்சில் புண்ணின் வேதனை... யோசனைகளில் வ
கூடியது.

சதா இவன் பெயரையே சொல்லித் துடிக்கும் நெஞ்ச
இனி இவனை மறக்குமா? சில நாளிலேயே வசமிழந்
உள்ளம் மீள இந்த வாழ்நாள் முழுக்கப் போதுமா?

போதாது என்றே தோன்றியது!

''ஷ்ஷ்....''

என்ன சத்தம்? விருட்டென்று எழுந்தவளது விழிகள்
அகன்றன. இருளில் திறந்த கதவில் நிழலோவியமா
நின்றது... தீபன்தான்.

''வா...'' சைகை செய்தான்.

உடல் சில்லிட்டது. ஆனாலும் பெற்றோர் அங்கிருக்கும்
துணிவில் எழுந்து நடந்தாள்.

''என்ன?''

''வெளியே வா.''

முன்னே நடந்தவன் நீச்சல் குளம் வரைப் போய்
விளிம்பை ஒட்டி அமர்ந்தான்.

குளத்தின் மொத்த நீரையும் பருகினாலும் போதாது
போல அவள் உதடும் தொண்டையும் உலர்ந்திருந்தன.

''நான் நளினாவிடம் பேசினது பற்றி... என்ன நினைச்சே
ஜோதிகா?''

அவன் அவள் பெயரை உச்சரித்த விதம் இன்பமாயிருந்தது.

''உம்... என் மானத்தைக் காப்பாற்றினீங்க.''

''ஊகூம்... அதில்லை. ராகவன் என்ன பிஸ்தா? ஜோதிகா
என்னைத்தான் காதலிக்கிறாள் என்று நான் சொன்னது
பற்றி...''



''அதான்... என்னைக் காப்பாற்றத்தானே அந்தப் பொய்

''மெய் பேசவேண்டுமானால் அது பொய்யில்லை, தே
நான் உன்னை விரும்புகிறேன்... ரொம்ப, ஆனால் உனக்
ராகவன் மீது சற்று பிரேமைதான், இல்லையா?''

அவன் விழிகள் ஒரு குழந்தையினது போல அவ
முகத்தை உன்னிப்பாய் ஆராய்ந்தன.

''அ... ஆ... இ...''

''அரிச்சுவடியைக் கேட்கலை... உண்மையைச் சொல்லு
இந்நிலையிலும் சீண்டினான்.

''இருந்ததாக நான் நினைத்தது உண்டு. இங்கு வ
பிறகுதான் அது காதல் இல்லை என்பது புரிந்தது. அ
வேலையில் திறமைசாலி... அதனைக் கண்டு ஒருவ
ஈடுபாடுதானே தவிர... இப்போது அவரை நம்பத்தகு
நல்ல நண்பராகக் கூட நான் கருதவில்லை. நளினா அ
மீது இத்தனை சந்தேகம் கொள்கிறாள் என்றால்,
தனைக்கும் இடம் கொடுக்கும் நடத்தை அவருடையது
அப்படித்தான் நான் சொல்வேன். வெளிப்படையா
பேச்சு, சுபாவமில்லை... பிறகெப்படி மனைவி நம்புவாள்..

''சரி, நாம இப்போ வெளிப்படையாய் பேசுவோம்.
என்னை விரும்புகிறாயா, தேவி?''

மூச்சுவிட சில கணம் மறந்துபோனது. பின் ஆழ
சிழுத்து விட்டாள் ஜோதிகா.

எங்கோ பூத்திருந்த பவளமல்லியின் மணம் மூக்
நிரப்பியது.

குளத்தில் பிரதிபலித்த வானநிலா நீரில் ஊஞ்சலா
கொண்டிருந்தது.

''ஆம்... ஆமாம். ஆனால் உங்கள் ஆசை நாயகிய
இருக்க நான் சம்மதிக்க மாட்டேன்'' உறுதியாகச் சொன்ன

ஆனால் ஆண்டவனே... இந்த உறுதி எத்தனை நாள் அல்லது நிமிடம்? நிலா பொழியும் இவ்வேளை இவன் ஆரத் தழுவினாலே உறுதி மிச்சமே இல்லாமல் அழிந்து போகும் அபாயம் உண்டே!

அவள் மனமும் நீரின் நிலா போல தளும்பி எம்பித் தத்தளித்தது!

## 19



''அ... அ... ஆ...'' உரக்க சிரித்து விட்டான், தீபன் தலையை பின்னுக்குச் சரித்து அடக்க முடியாது பொங்கிய சிரிப்பு!

மின்னலில் கோர்த்த முத்துக்களைப் போல் மோகன மாய்த் தெரிந்த அவனது பல் வரிசையை அச்சமும் ஆசையு மாய் பார்த்திருந்தாள்.

சிரிப்பு அடங்கியதும் கேட்டான் -

''என்ன... என்ன பேச்சு இது, தேவி?''

அவன் சிரிப்பு அவளை உசுப்பிவிட்டது.

''மன்னிக்கணும். நீங்கள் வீட்டில் இருந்தது தெரியாமல் நானும் தொலைபேசியை எடுத்துவிட்டேன். நீங்கள் பேசி யதை சிறிதளவு கேட்கவும் நேர்ந்துவிட்டது.'' கடுகடுப் புடன் மன்னிப்புக் கோரினாள்.

''இந்த அரைகுறை உளவு வேலை அதி ஆபத்தானதே. இப்போது நான் உன்னை அவசரமாய் அழைத்ததும் கூட அதற்காகத்தான்.''



நெருங்கியவன் மூச்சுக்காற்று அவள் காதோர முடிக் கற்றையை விசிறி விட்டது.

''எதற்காகத்தான்?'' நிமிர்ந்த போது தன் உதடுகள் அவன் கன்னங்களை ஒட்டி இருப்பதை உணர்ந்தாள். அப்படியே நெருக்கி முத்தமிட்டு விடலாம் போன்ற ஒரு மயக்க வெறி கிளம்பியது.

அவசரமாய் பின்னடைந்தாள்.

''இங்கு நம் விசயம்... என் வீட்டிற்கு சகலமும் தெரிந்து விட்டது. அதாவது நான் உன் மீது பித்துக் கொண்டு ஏங்குவது... புரிகிறதா?''

ஆனால், அதிகம் புரியவில்லை! தலை அசைத்தாள்.

''அத்தை மகள் ரத்தினம்தான் என் வீட்டில் எனக்காய் உளவு வேலை செய்பவள்.''

''நல்ல ஏற்பாடு.'' இளக்காரமாய் சொன்னாள். ஆனால் அவன் அதைக் கண்டு கொள்ளவில்லை.

''நாளை என் பெற்றோர் அவசரமாய்க் கிளம்பி இங்கே வருகிறார்களாம் - கல்யாணம் பேசி முடிக்க, அதைத்தான் அந்த வாண்டு அவசரமாய்க் கூப்பிட்டுச் சொன்னது.''

''நல்லது.''

''சம்மதந்தானே, தேவி?''

''ரத்தினத்திடம் கேட்க வேண்டிய கேள்வி?''

''நம் கல்யாணத்திற்கு அவளைக் கேட்பானேன்?''

''என்... என்னைக் கல்யாணம்...''

''பிறகு யாரையாம்? அதைச் சொல்லத்தான் ரத்னம் அழைத்தாள். பெரியவர்கள் வரும் முன்னாவது நாம் நம் மனதில் உள்ளதை வெளிப்படையாய்ப் பேசிவிட வேண்

டாமா? 'உடனே ஜோதிகாவிடம் உன் காதலைச் சொல்லி சரிக்கட்டு. அல்லது என்னைக் கட்டு' என்பது போன்ற ஒரு செல்ல மிரட்டல். அவளும் வனி, பிரியாவைப் போன்ற ஒரு பாசமான வாண்டு.''

''ஓ...''

உற்சாக ஊற்றுக்கண் எங்கோ திறந்து கொண்டது!

''பார்த்த முதல் நிமிடத்திலிருந்து நீ என்னில் பலத்த சலனம் ஏற்படுத்தி விட்டாய், தேவி.''

''படகில் சந்தித்தோம்.''

''இல்லை. சில மாதம் முன் பெங்களூரிலேயே நான் உன்னைப் பார்த்து விட்டேன்! உன் தோற்றம், வேலையில் இருந்த ஈடுபாடு, பிறரிடம் பழகும் பாங்கு அத்தனையையும் ரசித்தேன். உன்னைப் பற்றி சகலமும் விசாரித்துத் தெரிந்து கொண்டேன். இத்தனைக்கும் இதற்கு முன் பெண்கள் என்னைச் சலனப்படுத்தியதில்லை. நானும் அவர்களைப் பொருட்படுத்தியதில்லை.''

''ஆனால், நீ ராகவனை விரும்புகிறாயோ என்ற சஞ்சலம் முதலில் இருந்தது. ஆனால், அது புளித்த பழஞ்சோறு என்று சீக்கிரமே புரிந்துபோய் நெய் சோற்றருகே வந்து விட்டாய்!''

''ஐய...'' ஆனந்தமாய்ப் பழிப்புக் காட்டினாள்! ''அப்படியானால் என்னை இங்கே வரவழைத்தது...?''

''என் மூளைதான். அதன் திட்டம்தான்! 'வனவாச'த்தின் அருகே இருந்த இம்மாளிகை பல ஆண்டுகளாய் வெறுமே கிடந்தது. அதன் வேலையை முடுக்கிவிட்டு, வேலைக்கு ராகவனையும் ஏற்பாடு செய்தேன். கூடவே நீதான் தோட்டம் அமைக்க வேண்டும் என்றும் அவரிடம் சொல்லி விட்டேன்.''

அவள் குழப்பமாயும் பரவசமாயும் அவனை ஏறிட்டாள்.



...ன் கேள்வி புரிந்தாற்போல - ''எது என்னை உன்னிடம் ...த்தது என்பது புரியவில்லை. என் சின்னஞ்சிறுதேவி. ...கள்தோறும் தொடர்பு என்பதெல்லாம் மெய்தானோ?''

''ஆனால், உங்களிடம் என்னை இழுத்தது எது என்பது ...க்குத் தெரியும்.''

''எது?''

''இப்போது உங்கள் நல்ல மனம், எளிமை, அன்பு, ...ணியம் எல்லாம் புரிந்தாலும் முதலில் என்னை சலனப் ...த்தியது உங்கள் பார்வை... உங்கள் தீண்டல்... தீயாய் ...த்த அந்த அனுபவம் வித்தியாசமாய்...''

''ஐயய்யோ... சுட்டிருக்குமே!'' கன்னங்களை மிருதுவாய் வருடினான்.

''ஊகூம்... தித்தித்தது!''

''நீ நீர், இல்லையில்லை பன்னீர்.''

''வெந்நீர்னு சொல்லாத வரை சரி'' ஊடினாள்.

''நீர் எவ்வளவு சூடாய் இருந்தாலும் நெருப்பை அணைத்து விடும், தெரியுமா?''

''அடடே... மெய்யாவே அற்புதக் கருத்து. மூளைக்காரா தான்.''

''சொன்னது நானில்லை - பஞ்சதந்திரம்!''

ரசித்துப் புன்னகைத்த மலர் முகத்தை நிமிர்த்தி முத்த மிட்டான்.

மூடிய அவள் விழிகளில் நீர் கசிந்து வடிந்து, உதடுகளில் இனித்தது.